சர்வதேச மகளிர் தினம் - 2023

மார்ச் - 08

# சிறப்பு மலர்

# "நிஸா"

வெளியீடு:

பிரதேச செயலகம்

ஏறாவூர் நகரம்

இதழ் : 01

# “நிஸா”

## சர்வதேச மகளிர் தினம் - மார்ச் 08

## சிறப்புமலர் - 2023

வெளியீடு:

பிரதேச செயலகம்

ஏறாவூர் நகர்

# நிஸா

## சர்வதேச மகளிர் தின சிறப்புமலர் - மார்ச் 2023

## விழாக்குழு:

**தலைவர் - Mrs. நிஹாரா மௌஜூத் (பிரதேச செயலாளர்)**
உபதலைவர் Mr. AC. அஹமட் அப்கர் (உதவி பிரதேச செயலாளர்)
Mrs. MAH. சிஹானா (உதவி திட்டமிடல் பணிப்பாளர்)
Mrs. T. வினோதன் (கணக்காளர்)
Mr. SA. றஹீம் (நிருவாக உத்தியோகத்தர்)
Mr. K. கணேசமுர்த்தி (சமுர்த்தி தலைமையக முகாமையாளர்)
Mr. AMM. நபீஸ் (மேலதிக மாவட்ட பதிவாளர்)
Mr. MY. பைரூஸ் (பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்)

## மலர்க்குழு:

**தலைவர் - Mrs. நிஹாரா மௌஜூத் (பிரதேச செயலாளர்)**
உபதலைவர்: Mr. AC. அஹமட் அப்கர் (உதவி பிரதேச செயலாளர்)
Mrs. J. ஹாபிலா (மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்)
Mrs. T. மபாஹிறா மஸ்ஊத் (மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்)
Mrs. P. ஜேசுதாஸன் (பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்)
Mrs. T. புஸ்பலதா (மகளிர் அபிவிருத்தி வெளிக்கள உதவியாளர்)
Mr. MHM. நியாஸ் (கலாசார உத்தியோகத்தர்)
Mr. MIMM. மக்பூல் (கலாசார மேம்பாட்டு உத்தியோகத்தர்)
Mr. MCM. றிஸ்வான் (கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்)
Mr. K. உதயராஜ் (சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர்)
Mr. T. பிரபாகரன் (சிறுவர் உரிமை மேம்பாட்டு உத்தியோகத்தர்)
Mrs. சர்மிளா ஹாணுகிருஸ்னா (முன்பிள்ளை பருவ அபிவிருத்தி உத்.)
Mrs. S.உதயகாந்தன் (உளவளத்துணை உத்தியோகத்தர்)
Mrs. R.உதயச்சந்திரன் (உளவளத்துணை உத்தியோகத்தர்)
Mrs. MS. றமீஸா (சமூக சேவை அபிவிருத்தி உத்தியோகத்தர்)

## பக்க வடிவமைப்பு:

*எம்.எச்.எம். நியாஸ் (கலாசார உத்தியோகத்தர்)*

## அட்டை வடிவமைப்பு:

*எம்.ஐ.எம். முனீர் (அபிவிருத்திஉத்தியோகத்தர்)*

## வெளியீடு:

*மகளிர் அபிவிருத்திப்பிரிவு, பிரதேச செயலகம், ஏறாவூர் நகர்.*

# அரசாங்க அதிபரின் வாழ்த்துச்செய்தி



ஏறாவூர் நகர் பிரதேச செயலகம் சர்வதேச மகளிர் தினத்தை சிறப்பிக்கும் முகமாக வெளியிடும் **"நிஸா"** சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

**"ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால் அறிவிலோங்கி இவ்வையம் தழைக்குமாம்"** எனும் பாரதியின் பெண் அடிமை வரிகளை முன்னிலைப்படுத்தி ஆணும் பெண்ணும் சமமாக மதிக்கப்பட வேண்டியவர்களாவர். பெண்ணியத்தின் பெருமை பற்றி பொழுதெல்லாம் பேசலாம் என்பது யதார்த்தம். மனரீதியாக பலம் பொருந்திய பெண் தன்னைத்தானே செதுக்கிக் கொள்ளும் சிற்பமாவாள். நான்கு சுவருக்குள் அடங்கிப்போன பெண்கள் இன்று நாடாளும் வரை முன்னேறியிருப்பதையிட்டு நானும் ஒரு பெண் என்ற வகையில் கௌரவம் பெறுகின்றேன். இன்று பெண்கள் அடிவைக்காத துறையும் இல்லை அவள் பெறாத வெற்றியும் இல்லை. சாதனைக்கு சாட்சி செல்லும் சாதனையை தொட்டுவிட்ட பெண்ணியத்தைப் பற்றி எழுதிக்கொண்டே போகலாம்.

அடிமை விலங்கொடித்து பெண் ஆளப்பெற்றாலும் இன்னும் முழுமையாக பெண் ஜெயிக்கவில்லை. கல்வி, சாதி, வரதட்சணை, ஆணாதிக்கம், குடும்ப வன்முறைகளினால் இன்னும் பெண்கள் சிக்கித்தவிக்கின்றார்கள். ஆனாலும் பெண்கள் நலிவுற்று அழவில்லை. தடைகளைத் தாண்டி தன் கனவுகளையும் இலக்குகளையும் அடையக்கூடிய தைரியமும், ஆளுமையும் நிறைந்த சாதனைப் பெண்களாக நிரூபித்துக் காட்டியுள்ளனர். பெண்மை போற்றும் விதமாக அன்னை தெரேசா, கல்பனா சாவ்லா, மேரி கியூரி, வீரமங்கை வேலுநாச்சியார், கிரண் பேடி, போன்ற வீர மங்கைகள் பெண்கள் முன்னேற்றத்திற்கு முன்னுதாரணமாக வாழ்ந்து காட்டியவர்களாவர்.

இன்றும் விவசாயம், அரசியல், அழகுத்துறை, விமானம், விளையாட்டு, விண்வெளி, இராணுவம், சினிமா போன்ற எல்லாத்துறைகளிலும் ஆளுகின்ற பெண்களின் பெருமையை போற்றும் வகையில் கௌரவிக்கும் சிறப்பு மலர் வெளியீட்டுக்கு முன்னின்று உழைத்த பிரதேச செயலாளர் உட்பட மலர் வெளியீட்டுக் குழுவினருக்கு எனது மனப்பூர்வமான பாராட்டுக்களையும் நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திருமதி. கலாமதி பத்மராஜா**
அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளரும்,
மட்டக்களப்பு மாவட்டம்.

# பிரதேச செயலாளரிடமிருந்து...



“அவள் தேசத்தின் பெருமைக்குரியவள்” எனும் மகுடத்தில் இவ்வாண்டு கொண்டாடப்படும் சர்வதேச மகளிர் தின நிகழ்வையொட்டி எமது செயலக மகளிர் பிரிவினால் ஏற்பாடு செய்து வெளியிடப்படும் “நிஸா” எனும் மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் பேரானந்தம் அடைகின்றேன்.

‘அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு?’ என்று கேட்ட நிலையெல்லாம் கடந்து இன்று பெண்கள் ஆண்களுக்கு நிகராக ஏன் ஆண்களுக்கு சவால்விடும் பணிகளில் கோலோச்சி வருகின்றார்கள். இன்று பெண்கள் தொடாத உயரம் இல்லை, எட்டாத உச்சம் இல்லை.

மென்மையும் வன்மையும் கலந்த புதுமைதான் பெண்மை. அவர்களின் சாதனைகளை நிலை நிறுத்துவது, சவால்களை வெற்றி கொள்வது, உரிமைகளை வென்றெடுப்பது போன்றவற்றில் அதிக கவனம் செலுத்துவது இந்நாளின் நோக்கமாகும்.

எனவே, பெண்மையைப் போற்றி இந்நந்நாளில் வெளியிடப்படும் மலருக்காக உழைத்த அத்தனை உள்ளங்களுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களும் பிரார்த்தனைகளும்.

**ஜனாபா. நிஹாரா மௌஜூத்,**

பிரதேச செயலாளர்,

ஏறாவூர் நகரம்.

# உதவி பிரதேச செயலாளரிடமிருந்து...



மகளிர் தினத்தை முன்னிட்டு ஏறாவூர் நகர பிரதேச செயலகத்தினால் “நிஸா” எனும் சஞ்சிகை முதன்முதலாக வெளியிட்டு வைக்கப்படுவதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன்.

“அவள் தேசத்தின் பெருமைக்குரியவள்” எனும் தொனிப் பொருளில் இவ்வாண்டின் சர்வதேச மகளிர் தினம் கொண்டா டப்படுகின்ற இத்தருணத்தில் பெண்ணின் பெருமையைப் பேசும் வகையில் மலரொன்று வெளியிடப்படுவது மிகவும் பொருத்தமானது.

அரசியல், சமூக, பொருளாதார வளர்ச்சிக்கு பெண்களின் பங்கு மிகவும் அவசியமானது. பெண்களின் சம உரிமை, சமவாய்ப்பு, சம அந்தஸ்து என்பவை சரியாகப் புரிந்துகொள்ளப்படாதிருந்த காலத்தில் பெண்களின் சமூகப் பங்களிப்புகள் முறையாகப் பெற்றுக்கொள்ளப்படவில்லை. இவ்விடயங்கள் தொடர்பாக பெண்களை விழிப்படையச் செய்வதற்கு இச் சிறப்பு மலர் பெரும் பங்கை வகிக்கும் எனக் கருதுகிறேன்.

அரசியல் ரீதியில் அதிக செயற்பாடு கொண்ட, சமுதாயத்தை வடிவமைப்பதில் பெரும் பங்காற்றிய பெண்களின் வரலாறுகளை இஸ்லாமிய வரலாறு பதிவு செய்துவைத்துள்ளது. அல்குர்ஆனில் ‘நிஸா’ (பெண்கள்) எனும் பெயரில் தனியான ஓர் அத்தியாயம் இடம்பெறுவது பெண்களின் பெருமையை எடுத்துக்காட்டப் போதுமானது.

இவ்வகையில் பெண்களின் உரிமைகள், கடமைகள் பற்றியும் அவர்கள் எதிர்நோக்கும் சவால்கள், பிரச்சினைகள் பற்றியும் ஆராய்கின்ற ‘நிஸா’ எனும் இம் மலர் வருடாந்தம் மலர வாழ்த்துகிறேன்

ஏ.சீ. அஹமட் அப்கர்,
உதவி பிரதேச செயலாளர்,
பிரதேச செயலகம்,
ஏறாவூர் நகர்.

# இதழாசிரியர்களிடமிருந்து...





விண்ணையும் மண்ணையும் கண்ணெனக் காக்கும் வல்ல இறையோனுக்கே புகழனைத்தும் அல்ஹம்துலில்லாஹ். அவனின் திருப்பெயர் கொண்டு ஆரம்பிக்கின்றோம்.

தாயாக, மனைவியாக, சகோதரியாக, மகளாக என்று தம் உறவின் அனைத்து நிலைகளிலும் நீக்கமற நிறைந்திருக்கும் மகளிர் மாணிக்கங்கள் அனைவருக்கும் இனிய மகளிர் தின நல்வாழ்த்துக்களை தெரிவிப்பதில் பெரும் உவகையடை கின்றோம்.

பெண் என்பவள் அடுக்களையில் ஜடமாய் அடங்கிக் கிடப்பவள் அல்ல. மாறாக இன்றைய நவீன உலகத்தில் உயிர் நாடியாக மதிக்கப்பட வேண்டியவள். அன்னையாக அரவணைத்து, மகளாக மடி தவழ்ந்து, தோழியாக தோள் கொடுத்து, அன்பைக் கூட எதிர்பார்க்காமல் எல்லாப் பரிமாணங்களிலும் வாழும் இன்றைய பெண்ணினத்துக்கு போசாக்கிலும், குடும்ப வாழ்வியலிலும் அதிக கவனம் செலுத்துதல் அவசியமாகும்.

பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அற்ற பெண்களும் சிறப்பானதொரு உயிரியாக மதிக்கப்படுகின்ற அவளது கல்வி யிலும் அக்கறை செலுத்தி புதியதொரு உலகை எமக்கு தர வேண்டும். அதற்கான மனமாற்றங்கள் அடுப்பங்கரை முதல் அதிகார பீடம் வரை ஏற்பட வேண்டும் என்ற பிரார்த்தனை களுடன் தம்முடைய கரங்களை அணைத்துக் கொள்வதற்கு ஒரு தினம் போதாது. அதனை தழுவியதாகவே இந்நூல் எமது பிரதேச எழுத்தாளர்களின் உள்ளக்கிடக்கைகள், பல்வேறு திறமைகளின் வடிவங்களை தாங்கியதாக வடிவமைக்கப் பட்டுள்ளது என்றால் அது மிகையாகாது.

இந்நூல் குறுகிய காலத்திற்குள் சிறப்புற அமைவதற்கு ஊன்றுகோலாய் அமைந்து பல வழிகளிலும் பல்வேறு ஆலோச னைகளையும், வழிகாட்டல்களையும் வழங்கிய எமது மதிப்புக் குரிய பிரதேச செயலாளர், உதவி பிரதேச செயலாளர், பதவி நிலை உத்தியோகத்தர்கள் மற்றும் எமக்கு உதவிகளையும் ஒத்துழைப்புக்களையும் வழங்கிய சக உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் இதய பூர்வமான நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**திருமதி. ஜமால்தீன் ஹாபிலா, திருமதி. ஜ**.**மபாஹிறா மஸ்ஊத்**

மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்,
பிரதேச செயலகம்,
ஏறாவூர் நகர்.

# நுழைவாயிலில் ...

விடயம் | பக்கம்


| | விடயம் | | பக்கம் |
|---|---|---|---|
| 1. | சர்வதேச மகளிர் தினமும் பெண்களின் நிலையும் (கட்டுரை) | | 09 |
| 2. | பார்த்து நட பாத்தும்மா ...(கவிதை) | .. | 11 |
| 3. | சமூக உருவாக்கத்தில் ஸஹாபிய்யாத் பெண்களின் பங்களிப்புகள் | | 12 |
| 4. | டிஜிடல் உலகில் பெண்கள் (கட்டுரை) | .. | 15 |
| 5. | சுமை தாங்கி... (சிறுகதை) | .. | 17 |
| 6. | பெண் புத்தி பொன் புத்தி (கவிதை) | .. | 21 |
| 7. | சமூக உறவில் பெண்களின் பங்கு ஓர் இஸ்லாமிய பார்வை (கட்டுரை) | | 23 |
| 8. | பிரசவ அறை பேசுகிறது (கவிதை) | .. | 26 |
| 9. | ஒரு மொட்டு மலர்கிறது. (சிறுகதை) | .. | 27 |
| 10. | பெண்ணே நீ அழாதே ... (கவிதை) | .. | 30 |
| 11. | இஸ்லாமிய பெண்களும் வெட்கமும் (கட்டுரை) | .. | 31 |
| 12. | பெண் (கவிதை) | .. | 33 |
| 13. | விடியலை நோக்கி ...(சிறுகதை) | .. | 34 |
| 14. | பெண் ஒரு வரம்... (கவிதை) | .. | 37 |
| 15. | பெண்கள் தொழில் தேடி வெளிநாடு செல்வதால் ஏற்படும் விளைவுகள் | | 38 |
| 16. | சுமை தாங்கி... (கவிதை) | .. | 40 |
| 17. | பெண்ணாகப் பிறந்த பொக்கிஷம் பெண் (கட்டுரை) | .. | 41 |
| 18. | பெண் கல்வி (கவிதை) | .. | 43 |
| 19. | வாழ்வின் புதிரானவள் பெண் (கட்டுரை) | .. | 44 |
| 20. | மகளிர் எனும் மாணிக்கம் (கவிதை) | .. | 46 |
| 21. | சுபீட்சமான குழந்தை வளர்ப்பில் பெற்றோரின் பங்களிப்பு (கட்டுரை) | | 47 |
| 22. | நன்றி நவில்கிறோம் | .. | 52 |


இச்சஞ்சிகை தாங்கி வரும் ஆக்கங்கள் யாவும் படைப்பாளிகளின் சுய கருத்துக்களையே பிரதிபலிக்கின்றன.



# சர்வதேச மகளிர் தினமும் பெண்களின் நிலையும்

பன்னூலாசிரியர்

**கௌரவ கலாநிதி ஹாஜியானி செய்னுலாப்தீன் நஸீரா**

ஆண்டு தோறும் மார்ச் மாதம் 08 ஆம் தேதி சர்வதேச மகளிர் தினம் இந்த உலகம் முழுவதும் கொண்டாடப்படுகின்றது. இந்த மகளிர் தினம் என்ற எண்ணக் கரு எவ்வாறு உருவானது? இதை ஏன் நாம் கொண்டாட வேண்டும்? இந்த மகளிர் தினத்தை யார் கொண்டாட வேண்டும்? என நாம் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். பல இடங்களில் பெண்கள் அமைப்புகள் அல்லது பெண்கள் சார்ந்த அமைப்புகள் சர்வதேச மகளிர் தினத்தைப் பல்வேறு வடிவங்களில் கொண்டாடு கின்றார்கள். பலருக்கு இதன் நோக்கம் என்னவென்றே புரிவதில்லை.

பதினெட்டாம் நூற்றாண்டுக்கு முற்பட்ட காலப்பகுதிகளில் பெண்கள் என்றால் "வீட்டு வேலைகள் செய்வதற்கு உரியவர்கள்" என்ற கருத்துடன் வீட்டுக்குள் முடக்கி வைக்கப்பட்டார்கள். 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதிகளில் பெண்கள் தொழிற்சாலை, அலுவலகம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் ஆண்களுக்கு நிகராக கால் பதிக்கத்தொடங்கினர். இருந்த போதிலும் வேலைத்தளங்களில் பெண்களுக்கான உரிமை, ஊதியம் போன்றவற்றில் பாரபட்சம் காட்டப்பட்டது. கூலி வேலைகளுக்குக் குறைந்த சம்பளத்தில் பெண்களை அமர்த்துவது வழக்கமாகி வந்தது. இவ்வாறான காரணங்களினால் கொதித்தெழுந்த பெண்களினால் 1908 ஆம் ஆண்டில் அமெரிக்கா வின் நியூயோர்க் சிட்டியில் "பெண்களுக்கு சமமான ஊதியம் வழங்க வேண்டும் வேலை நேரத்தைக் குறைக்க வேண்டும் ஊதியத்தை அதிகப்படுத்த வேண்டும்" போன்ற கோரிக்கைகளை முன்வைத்து பெரும் புரட்சி நடத்தப்பட்டது. 1910 ஆம் ஆண்டு டென்மார்க் நாட்டின் கோபன் ஹேகன் நகரில் மாபெரும் பெண்கள் உரிமை மாநாட்டை நடத்தினர். இதில் 17 உலக நாடுகளைச் சேர்ந்த ஏறத்தாழ 100 முக்கிய பெண்கள் கலந்து கொண்டு தங்கள் உரிமைகளுக்காக கைகோர்த்து நின்றனர்.

இந்த மாநாட்டை ஒழுங்கு செய்து பெண்களை ஒருங்கிணைத்து பெண்களின் உரிமைகளுக்காக குரல் கொடுத்தவர் ஜெர்மனியைச் சேர்ந்த "கிளாரா ஜெட்கின்" என்ற புரட்சிப் பெண்ணாவார். கிளாரா ஜெட்கின் பெண்களின் உரிமைகளைப் பேச உலகம் முழுவதும் ஒரு குறிப்பிட்ட ஒரு நாளைப் பெண்கள் தினமாகக் கடைப் பிடிக்க வேண்டும் என்று வலியுறுத்தி வந்தார். எனினும் பல்வேறு காரணங்களால் இக்கருத்து நிறைவேற்றப்படாமல் அடுத்தடுத்த ஆண்டுகளில் ஒவ்வொரு நாடும் ஒவ்வொரு தினத்தில் மகளிர் தினத்தை கொண்டாடி வந்தனர்.

அதன் பின்னர் முதலாம் உலகப்போர் நடந்து கொண்டிருந்த காலத்தில் 1917 இல் ரஷ்யாவில் நடைபெற்ற பெண் தொழிலாளர்களின் புரட்சி உலகையே திரும்பிப் பார்க்க வைத்தது. அப்புரட்சியின் தாக்கத்தால் அப்போதைய ரஷ்ய மன்னன் "ஜார்" என்பவரின் ஆட்சியே கவிழ்ந்தது என வரலாறு சான்று பகர்கின்றது. இப்புரட்சி "போர் வேண்டாம் ரொட்டியும் அமைதியும் (Peace and bread) வேண்டும்" என்ற கோசத்தினடிப்படையில்

முன்னெடுக்கப்பட்டது. அதன் பின்னர் 1975 ஆம் ஆண்டில் மார்ச் 08 ஆம் திகதியை ஐக்கிய நாடுகள் சபை சர்வதேச மகளிர் தினமாக அங்கீகரித்தது. 1975 ஆம் ஆண்டின் சர்வதேச மகளிர் தினமானது "சமத்துவத்தை யோசி, அதிகாரப்பூர்வமாக அதைக் கட்டியெழுப்பு, மாற்றத்திற்காக புதுமையாக சிந்திக்கத் தொடங்கு" என்ற தொனிப்பொருளில் அமைந்தது.

இன்று உலகில் பெண்கள் கல்வியிலும் விஞ்ஞானத்திலும் காலூன்றி உலகின் கண்டறியப்பட்ட ஆட்சித் துறை, விமானத்துறை, கப்பல் துறை, விஞ்ஞான ஆய்வுகள் என சகல துறைகளிலும் காலூன்றி, வியாபித்து நிற்பது பெருமைக்குரிய விடயமே. "சட்டங்கள் ஆள்வதும் பட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்" என்று பாரதி கற்பனையில் வடித்த பெண்கள் இன்று நிஜத்தில் தமது திறமைகளைப் பறைசாற்றி வெற்றியின் உச்சத்தில் கோலோச்சுகின்றார்கள் என்றால் மிகையாகாது. தற்காலத்தில் பெண்கள் எத்தனை துறைகளில் உச்சம் தொட்டாலும், பல சாதனைகள் படைத்து வெற்றி நடை போட்டாலும், பெண்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் வன்முறைகளும் அதனால் பெண்கள் எதிர்நோக்கும் சவால் களும் தொடர்ந்த வண்ணமே இருக்கின்றன. பெண்கள் செல்லுகின்ற பாதைகளில் "ஆண்" என்ற மற்றோர் ஆதிக்க வர்க்கத்தின் அதிகார வன்முறைகளில் இருந்து தப்பிப்பது கடினமாகவே உள்ளது. தன்னுடைய தாயையும் உடன் பிறந்த சகோதரிகளையும் சொந்த மனைவியையும் பாதுகாக்கும் கேடயமாக செயல்படும் ஆடவர்கள் பலர் அதற்கப்பால் உள்ள ஏனைய பெண்களை மாறுபட்ட பார்வையில் நோக்குவதை நாம் பல இடங்களில் காண்கின்றோம்.

இன்று உலகின் பல்வேறு பிரதேசங்களில் சின்னஞ்சிறு சிறுமியர்களின் பாலியல் துஷ்பிரயோகங்கள், படுகொலைகள் எம் மனதைக் கொதித்துக் குமுற வைக்கின்றன. அவ்வாறே பல்வேறு பாடசாலைகளில் மாணவிகள் ஆசிரியர்களால் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாக்கப்படும் செய்திகளை நாம் அறிகின்றோம். இத்தகைய காமுகர்கள் அச்சிறுமியர்களை தம் சொந்தப்பிள்ளைச் செல்வங்களுக்கு ஒப்பிட்டுப் பார்ப்பதேயில்லை. இத்தகைய துஷ்பிரயோகங்களின் போது தமது பிள்ளைகள் அவர்கள் மனக்கண்ணில் வருமாக இருந்தால், தனது சொந்தப் பிள்ளைக்கு இத்தகைய நிலை ஏற்படுவதை நினைத்துப் பார்ப்பார்களாயிருந்தால் இத்தகைய வன்முறையில் ஈடுபடுவதிலிருந்தும் அவர்களால் விலக முடியும். எனினும் அவ்வாறு சிந்திக்க முடியாத அளவுக்கு அவர்களது உள்ளங்கள் விலங்கிடப்பட்டுள்ளன. இன்னும் அநேக இடங்களில் பெண்களுக்கு உதவுவதாக நடித்துப் பாசாங்கு செய்து, அந்தப் பெண்களின் பொருளாதாரக் கஷ்டங்களை சாட்டாக வைத்து அல்லது மன உளைச்சலுக்குள்ளான பெண்களைத் தமது பசப்பு வார்த்தைகளால் மதி மயங்க செய்து, தமது இச்சைகளைப் பூர்த்தி செய்து கொண்டு சமூகத்தில் தான் நல்லவன், உயர்ந்தவன், கௌரவமானவன் என வேஷம் போட்டு திரியும் பெரிய மனிதர்கள் பலர் எம் மத்தியில் உள்ளனர். இவர்கள் எப்போதாவது தன் தாயைப் பற்றி, சகோதரிகளைப் பற்றி, மனைவியைப் பற்றி, பெண் மக்களைப் பற்றி இவ்வாறான சூழ்நிலைகளில் நினைத்துப் பார்ப்பதுண்டா?

எனவே, பல்வேறு போராட்டத்துக்கும் மத்தியில் உருவாக்கப்பட்ட இந்த சர்வதேச மகளிர் தினத்தில் பெண்களுக்கான பாதுகாப்பை, சுதந்திரத்தை உறுதிப்படுத்துவதற் கான பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். எதிர்காலத்தில் அதற்கான தொனிப்பொருள்கள் உருவாக்கப்பட்டு பாலியல் துஷ்பிரயோகங்களில் இருந்து பெண்களும் பெண் குழந்தைகளும் பாதுகாக்கப்பட வேண்டும். இத்தகைய மாற்றம் ஒன்றுக்கான அடி நாதமாக மகளிர் தின விழாக்கள் ஏற்பாடு செய்யப்பட வேண்டும்.

# பார்த்து நட பாத்தும்மா!

பாத்தும்மா, பாத்தும்மா....
பார்த்து நட பாத்தும்மா!
'பாத்திமா' வழித்தடம்கால்
பதித்து நட பாத்தும்மா
பத்மலதா, பார்வதியை
மதித்து நட பாத்தும்மா!

***

வீடுகளில், விடுதிகளில்
விளையாட் டரங்குகளில்
பெண்களுக்கெதிரான
வன்முறைகளை அறிந்து!
பேணுதலாய், தன்மானம்
பேணி நட பாத்தும்மா!

***

கற்புடமை கடைச்சரக்காய்
விற்பனைக்குள் ளாதலையும்,
பண்பாடு, கலாசாரம்
படுகுழியுள் வீழ்தலையும்
'அநாகரிக அரங்கேற்றம்'
நாகரிக மாதலையும்,
கலாசாரம் களை இழந்து
கண்முன்னே சிதைதலையும்,
ஆடல்களில், பாடல்களில்
ஆபாசம் மிகுதலையும்,
அச்சம், மடம், நாணம்
அச்சறுந்து போதலையும்,
சதி, பதிகளின் உறவில்
'சந்தேகம்' எழுதலையும்,
நற்பண்பு, நல்லெண்ணம்,
நன்னடத்தை நலிதலையும்,
படித்தவள் நீ பகுத்துணர்ந்து
பார்த்து நட பாத்தும்மா!
பத்மலதா, பார்வதியைச்
சேர்த்து நட பாத்தும்மா

குரு, சிஷ்ய மரியாதை
குன்றிக் குறைகிறது!
கொலை, கொள்ளை, வாள்வெட்டு
கொடியேறிப் பறக்கிறது!
போதைப் பொருள், கடத்தல்
புகைபிடித்தல் தொடர்கிறது!

***

கைபேசிகளின் காதல்
கண்ணீரில் சிதைகிறது!
காட்டிக் கொடுத்தல், சதி
கரைகடந்து போகிறது!
மூட்டிக் கெடுத்தல்களால்
முகவரிகள் புதைகிறது!
தாலி ஒரு வேலியெனும்
தற்காப்பும் அறுவதனால்...
பாத்தும்மா... பாத்தும்மா...
பாத்து நட பாத்தும்மா!
பத்மலதா, பார்வதியை
சேர்த்து நட பாத்தும்மா!

***

வறுமையிலும் பொறுமையுடன்
வாழப்பார் பாத்தும்மா!
ஐங்கடமை, ஐவேளை
புரியப்பார் பாத்தும்மா!
நாளைவரும் மறுமைத்
தீர்வின் அடிப்படையில்
சோலைச் சுவன மனை
சொந்தம்கொள் பாத்தும்மா!
பாத்தும்மா... பாத்தும்மா,
பார்த்து நட பாத்தும்மா!
'பாத்திமா' வழித்தடம்கால்
பதித்து நட பாத்தும்மா

**கே.எப். சுப்ஹானி**

# சமூக உருவாக்கத்தில் ஸஹாபிய்யாத் பெண்களின் பங்களிப்புகள்

M.C.M. **றிஸ்வான் (கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்)**

பெண்மை, தாய்மை, வெட்கம் எனும் ஆத்மாத்த அடையாளங்களின் மொத்த வடிவமே பெண்ணாகும். சமூக உருவாக்கத்தில் பெண் முக்கிய பாத்திரத்தினை வகிக்கின்றாள். தாயாக, தாரமாக, தங்கையாக, தமக்கையாக, மகளாக மாத்திரமல்லாமல் கல்வி, மருத்துவம், பொருளாதாரம், நிருவாகம், அரசியல், அழைப்புப்பணி, சமூக எழுச்சி என பல துறைகளில் பங்காற்றுவதைக் காணலாம்.

சிறந்த சமூகம் கட்டியெழுப்பப்படவேண்டுமாயின் சிறந்த பெண் உருவாக்கப்படல் வேண்டும் அதன் மூலமே சிறந்த சமூகத்தை உருவாக்க முடியும். “தாய் ஒரு பாடசாலை அவளை நீ உருவாக்கினால் நல்ல பண்புள்ள சமூகத்தை உருவாக்கிவிட்டாய்” என எழுச்சி கவிஞர் ஷவ்கி கூறுவார்.

பெண்களின் உரிமை கடமை சிறப்பு பற்றி அல்குர்ஆன் பல்வேறு இடங்களில் குறிப்பிட்டுள்ளது. அவைகளில் பெண்களை கௌரவிக்கும் வகையில் பெண்கள் எனும் பொருள்தரும் “அந்நிஸா” எனும் அத்தியாயத்தை அல்லாஹ் அருளியுள்ளான்.

அல்குர்ஆனில் நான்காவது அத்தியாயமாக காணப்படும் அந்நிஸா அத்தியாயம் பெண்கள் தொடர்பாக பின்வரும் முக்கிய விடயங்களை கொண்டுள்ளது.

- ❖ உரிமைகள் பற்றி அதிகம் குறிப்பிடுகின்றது.
- ❖ பெண்கள் என்பதை குறிக்கும் அந்-நிஸா எனும் சொல்லினை அதிகம் குறிப்பிடுகின்றது.
- ❖ கணவன் மனைவி தொடர்பாடல் ஒழுங்கினை குறிப்பிடுகின்றது.
- ❖ திருமணத்தின் போது பெண்களுக்கு வழங்கப்படும் “மஹர்” எனும் மணக்கொடை அவசியம் என்பதை உறுதிப்படுத்துகின்றது.
- ❖ பெண்களுக்கு நீதியான சொத்துரிமையை உறுதிப்படுத்துகின்றது.
- ❖ பெண்களுக்கு எதிரான வன்முறைகள் கொடுமைகள் தடுக்கப்பட்டது எனவும் அவை நிறுத்தப்பட வேண்டும் என்பதையும் வலியுறுத்துகிறது.

பெண்களின் இவ்வுரிமைகள் கிபி 570ல் பிறந்து 632ல் மரணித்த இறைதூதர் முஹம்மத் அவர்களுக்கு அருளப்பட்ட அல்குர்ஆனில் அல்லாஹ் உறுதிப்படுத்திய உரிமைகளாகும். இந்த வகையில் இஸ்லாம் பெண்களுக்கு வழங்கிய உரிமைகள் காலத்தால் முந்தியதாகும்.

சமூகத்தை கட்டியெழுப்பும் பணியில் பங்காற்றும் பெண்கள் தன்னகத்தே கொண்டிருக்க வேண்டிய ஆளுமை பண்புகளாவன.

- நடு நிலை, சம நிலை
- யதார்த்தமான நடைமுறை சாத்தியமான இயல்பு (Realism)
- நேர் மறை
- அறிவு நுட்பம்
- பக்குவம்
- மன உறுதி
- தொழில் முறை (Professional)

இறைவன் படைத்த பல பலவீன நியதிகளின் அடிப்படையிலும் சமூகத்திற்கு பணியாற்ற வேண்டிய கடப்பாடு பெண்களுக்குண்டு என்பதை மறுக்க முடியாது.

**சமூகத்தை கட்டியெழுப்புவதில் பங்காற்றிய முன்மாதிரி பெண்கள்**

சமூக உருவாக்கத்தின் அடிப்படை குடும்பமாகும். சிறந்த குடும்பத்தை உருவாக்க பெரிதும் பங்களிப்பு செய்வது மனைவியாகும். இதனால்தான் நபியவர்கள் கூறினார்கள் "உலகம் மகிழ்ச்சி தரக்கூடியது அது தரும் ஆனந்தங்களில் சிறந்தது நல்ல பெண்ணாகும்" (நூல்: முஸ்லிம்)

திருமண பந்தத்தின் எதிர்பார்ப்பு அன்பும் கருணையும் நெருக்கமுமாகும். "இன்னும் நீங்கள் அவர்களிடம் ஆறுதல் பெறுதற்குரிய மனைவியரை உங்களி லிருந்தே உங்களுக்காக அவன் படைத்திருப்பதும் உங்களுக்கிடையே அன்பையும் கருணையையும் ஏற்படுத்தியிருப்பதும் அவனது அத்தாட்சிகளில் உள்ளதாகும்." (அத்தியாயம்:அர்றூம் வசனம்: 21)

**அன்னை கதீஜா (றழி)**

முஹம்மது நபியவர்களுக்கு முதல் அல்குர்ஆன் வசனம் அருளப்பட்டதும் நபியவர்கள் தனது மனைவி கதீஜா அவர்களிடம் வருகிறார்கள் மனைவி தனது கணவருக்கு ஆறுதல் வார்த்தைகள் கூறி தைரியமூட்டி நபியவர்கள் தனது பிரச்சார பணியினை மேற்கொண்டு அறியாமைக்கால மக்களை அறிவுசார், பண்புசார் சமூகமாக கட்டியெழுப்புவதில் பெரும் பங்காற்றினார்கள்.

**அன்னை உம்மு ஸலமா (றழி)**

இஸ்லாமிய வரலாற்றின் ஹிஜ்ரி 6ல் நபியவர்கள் மக்காவிற்குள் நுழைய முடியாமல் ஹுதைபிய்யா எனும் இடத்தில் தடுத்து நிறுத்தப்படுகிறார்கள். அங்கு ஒரு புரிந்துணர்வு உடன்படிக்கை இடம்பெறுகின்றது. இதனடிப்படையில் நபியவர்கள் மதீனாவிற்கு செல்லவேண்டும். தனது தோழர்களை நோக்கி தமது தலை முடிகளை வெட்டி இஹ்ராம் ஆடையினை மாற்றுமாறு கூறுகின்றார்கள். எனினும் மக்காவிற்குள் நுழைந்து உம்றா செய்யவேண்டும் எனும் ஆசையோடு வந்த தோழர்களால் அதனை உடனடியாக செய்ய முடியவில்லை. இந்த நேரத்தில் நபியவர்களின் மனைவி உம்மு ஸலமா அவர்கள் நபியை பார்த்து நீங்கள் முதலில் உங்களது தலைமுடியினை வெட்டி ஆடையை மாற்றுங்கள் உங்களது தோழர்களும் அதனை செய்வார்கள் எனச் சொன்னார்கள். நபியவர்களும் அவ்வாறே செய்ய தோழர்களும் உடனடியாக தமது முடிகளை வெட்டி ஆடைகளை மாற்றிய வரலாற்றினை நாம் ஏடுகளில் பார்க்கின்றோம் இங்கும் உம்மு ஸலமா எனும் பெண்ணே முரண்பாட்டு நிலையினை போக்கி சமூகத்தை கட்டியெழுப்பும் பணியினை மேற்கொண்டார்கள்.

**அறிவின் சிகரம் அன்னை ஆயிஷா (றழி)**
இவர் அறிவில் சிறந்து விளங்கிய பெண்ணாகும். நபியவர்களின் பொன்மொழிகளான ஹதீதுகளை அதிகம் அறிவித்த பெண் எனும் சிறப்பை பெறுகின்றார். அறிஞர் ஹிஷாம் சொல்வார்கள் இஸ்லாமிய சட்டத்துறையிலும் வைத்தியத்திலும் கவியாக்கத்திலும் ஆயிஷா சிறந்த புலமையுள்ளவராக விளங்கினார்கள் என்று சொன்னார். தனது அறிவுத்திறனால் அறிவார்ந்த சமூகத்தை உருவாக்க இவர்கள் பெரிதும் பங்காற்றினார்கள்.

**வீரத்தியாகி சுமைய்யா (றழி)**
இஸ்லாமிய நம்பிக்கை கோட்பாட்டினை தனது வாழ்வியலாக ஏற்றதனால் அக்கால மக்களால் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டு உயிர் நீத்த முதல் பெண்ணாகும். முஸ்லிம்கள் சிறுபான்மையினராக வாழ்ந்த மக்காவில் தமது கலாசாரத்தையும் கொள்கை கோட்பாட்டினையும் விட்டுக்கொடுக்காது மன உறுதியோடு சவால்களை எதிர்கொண்டு பண்பாடும் கோட்பாடும் மிக்க சமூகத்தை உருவாக்க பெரிதும் பங்களிப்பு செய்தார்கள்.

**வீரத்தியாகி நஸீபா பின்த் க.்.ப் (றழி)**
அல் அகபா உடன்படிக்கையில் கலந்து கொண்ட இவர்கள் உஹத் யுத்தத்தில் தனது கணவன் மற்றும் பிள்ளைகளுடன் குடும்ப சகிதம் கலந்து கொண்ட இவர் யமாமா போர்களத்தில் போராடி 12 காயங்களுடன் உயிர் நீத்தார். யுத்த களத்திலும் பெண்களால் போராட முடியும் எனும் முன்னுதாரணமாக விளங்கி சமூக உருவாக்கத்தில் பங்காற்றினார்கள்.

**அஸ்மா (றழி) தாத் அந்நிதாகைன்**
முஸ்லிம்களின் வாழ்க்கையினை தலை கீழாக மாற்றி கௌரவத்தோடும் தலைமைத்துவத்தோடும் சாம்ராஜ்யத்ததை உருவாக்கும் வகையில் பெரும் திருப்புமுனையாக அமைந்தது நபியவர்களின் ஹிஜ்ரத் பயணமாகும்.

மக்கத்து மக்களின் கெடுபிடிகளுக்கு மத்தியில் அம்மக்களின் கண்களில் மண்ணைத்தூவி நபியவர்களுக்கு பயணத்தின் போது உணவினை வழங்கி ஹிஜ்ரத் பயணத்தினை வெற்றிபெறச்செய்த பெருமை அஸ்மா அவர்களையே சாரும். இந்த வகையில் சமூக உருவாக்கத்திற்கான இவரது பங்களிப்பு மகத்தானதாகும்.

**முதல் தாதி முஸ்லிம் பெண் றுபைதா அல் அஸ்லமிய்யா (றழி)**
யுத்த காலங்களின் போது நடமாடும் வைத்திய முகாம்களை நிறுவி காயமுற்றவர்களை தனது சொந்த செலவில் பராமரித்து வைத்தியம் செய்த முதல் தாதியும் பெண் வைத்தியராகவும் இவர் காணப்படுகின்றார்.

அகழி யுத்தத்தில் காயமுற்ற ஸ.்.த் பின் முஆத் (றழி) அவர்களை வைத்திய முகாமில் வைத்து சிகிச்சை வழங்கிய பெருமை இவரையே சாரும். சமூக உருவாக்கத்தில் இவரது பங்களிப்பு மகத்தானதாக என்றென்றும் பார்கப்படுகின்றது.

இவ்வாறான வரலாற்று பாரம்பரியங்களை கொண்ட நாம் பெண்மையின் அடையாளத்துடன் எமது தாய் நாட்டினை கட்டியெழுப்புவதில் பங்களிப்பு செய்து தேசத்தின் பெருமைக்குரியவர்களாக வரலாற்றில் மாற முன்வரவேண்டும்.

# டிஜிட்டல் உலகில் பெண்கள்

டிஜிடல் உலகில் இன்றைய பெண்களின் பங்களிப்புகள் மிகப் பெரிய சாதனைகளை ஏற்படுத்தி உள்ளன. டிஜிடல் உலகினை அணுகல் மற்றும் பாதுகாப்பின் முக்கியத்துவத்தையும் அதிகளவில் பெண்களே எடுத்துரை கின்றனர். டிஜிடல் கற்கை நெறிகளில் இன்று பெண்கள் அதிகம் அக்கறை செலுத்தி வருகின்றனர்.

டிஜிடல் முறையினூடாக உலகில் பரப்பப்பட்ட விடயங்களை ஆர்வத்துடனும், சுறுசுறுப்புடனும் பாதுகாப்பாக பயன்களைப் பெற்றுக் கொள்ள இளம் பெண்களும், சிறுமிகளும் ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

நவீன தொழிநுட்ப முறைகளை டிஜிடல் வடிவில் பெண்கள் அதிகளவான உருவாக்கங்களை உருவாக்கிக் கொண்டு வருகின்றார்கள் என்றால் அது மிகையாகாது. இளம் பெண்கள் தங்கள் திறமைகளைப் பயன்படுத்தி ஏனைய பெண்களையும் அடிப்படை தகவல் தொழிநுட்பத் திறன்களை தொடர ஊக்கப்படுத்துகிறார்கள்.

இன்று பெண்கள் ஒன்லைன் மூலமாக தங்கள் அனைத்து தேவைகளையும் நிறைவேற்றிக் கொள்ளக் கூடியதான நிலையில் காணப்படுகின்றார்கள். தங்களுக்கான சுய தொழில்களை இந்த டிஜிடல் தொழிநுட்பத்தினூடாக நிறைவேற்றிக் கொள்கின்றார்கள். அதன் மூலம் வருமானமீட்டிக் கொள்ளக் கூடிய ஒரு துறையாகவும் இதனை பெண்கள் பயன்படுத்திக் கொள்கிறார்கள்.

ஊடகத்தை எடுத்துக் கொண்டால் தனக்கென தனியான தளங்களை இந்த டிஜிடல் தொழிநுட்பத்தின் மூலம் ஏற்படுத்திக் கொண்டு, அதாவது இணையதளங்கள், யூடியுப் சனல்கள், சமூக வலைத்தளங்கள் போன்ற வற்றின் ஊடாக இன்று பெண்கள் பயணிக்கக் கூடியவர்களாக காணப்படு கின்றார்கள்.

**ஊடகத்தை எடுத்துக் கொண்டால் தனக்கென தனியான தளங்களை இந்த டிஜிடல் தொழிநுட்பத்தின் மூலம் ஏற்படுத்திக் கொண்டு, அதாவது இணையதளங்கள், யூடியுப் சனல்கள், சமூக வலைத் தளங்கள் போன்றவற்றின் ஊடாக இன்று பெண்கள் பயணிக்கக் கூடியவர்களாக காணப்படுகின்றார்கள்.**

முஸ்லிம் பெண்களை எடுத்துக்கொண்டால் இஸ்லாமிய ஒழுக்க விழுமியங்களுக்குள் நின்று இந்த டிஜிடல் நுட்பத்தினூடாக பயணிக்கக் கூடியவர்களாகவும் காணப்படு கிறார்கள்.

பல அனுகூலங்களை இந்த டிஜிடல் பயன்பாடு எற்படுத்திக் கொடுத்தாலும் பல பிரதிகூலங்களாலும் பெண்கள் ஆட்கொள் ளப்படுகிறார்கள். அதாவது இணையவழி பாலியல் வன்முறைகளுக்கும் ஆளாக் கப்படுகிறார்கள். அதனால் பெற்றோர் களால் கட்டுப்படுத்தப்படுகிறார்கள்.

தொழிநுட்ப, இணையவழி பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளாகும் பெண்களின் உடல், மன உணர்ச்சிகள் அவர்களது நல்வாழ்வை எதிர்மறையாக பாதிக்கின்றது. டிஜிட்டல் உலகமும், இன்டர்நெட்டும் சேர்ந்து உருவாக்கி யிருக்கும் புதிய சூழல் பெண்களுக்கு கூடுதல் நெருக்கடியை உருவாக்கி யிருக்கின்றது.

தவறான இடங்களில் இருந்து கிடைக்கும் முரண்பாடான, கிளர்ச்சியூட்டும் தகவல்கள் பெண்களிடையே பெருங்குழப்பங்களை ஏற்படுத்துகின்றன. இதிலிருந்து பாதுகாப்பு பெறுவது என்பது பெண்களுக்கு பெரும் சவாலாக உள்ளது.

இன்றைய இளம் பெண்கள் டிஜிடல் புரட்சியில் சேரவே விரும்புகிறார்கள். அவர்களுக்கு அதில் ஏற்படும் தடைகள் அகற்றப்படுமாக இருந்தால் சிறப்பான பங்களிப்பை அவர்களால் வழங்க முடியும். அத்துடன் இணைய தொழிநுட்ப வசதியின்மையால் ஏற்படும் பாதிப்புக்கள் பொருளாதாரத்தில் தாக்கத்தை செலுத்துவதாக அமைகின்றது. கல்வி, வேலைவாய்ப்பு, தொழில்முனைவு ஆகியவற்றில் இது ஏற்படுத்தும் தாக்கம் நாட்டின் பொருளாதாரத்திலும் பாதிப்பை ஏற்படுத்துவதாக அமைகின்றது.

பெண்கள் இணையத்தை பயன்படுத்துவதில் உள்ள இடைவெளியை குறைக்க அரசு தரப்பில் போதுமான திட்டங்கள் மற்றும் போதியளவு நடவடிக்கைகள் இல்லாத நிலையில் உள்நாட்டு மொத்த உற்பத்தியில் இழப்புக்கள் ஏற்பட்டுள்ளதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன. டிஜிடல் பாலின இடைவெளி தொடர அனுமதிக்க கூடாது என்றும், எதிர்காலத்தில் இந்த நிலையை மாற்ற வேண்டும் என்றும் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

அனைத்து பெண்களுக்கும் மகளிர் தின வாழ்த்துக்கள்


**சமீஹா சபீர்**

**சிரேஷ்ட ஊடகவியலாளர்.**

**(கிழக்கிலங்கையின் முதல் முஸ்லிம் பெண் ஊடகவியலாளர்)**


***ஒரு பெண் வீட்டிலுள்ள மீதி உணவை வீணாக்காமல் தர்மம் செய்தால் அவள் தர்மம் செய்த நன்மையைப் பெறுவாள்***



***அறிவிப்பவர்: ஆயிஷா (ரலி ) – புகாரி: 1425***

# சுமை தாங்கி

(சிறுகதை)



Dr. **ஜலீலா முஸம்மில்**

**ஏறாவூர்**

மயான அமைதியுடன் மெல்ல விடியல் தொடங்கியது. சூரியக் கிரணங்களை வானத்தில் கருமேகங்கள் மறைத்துக் கொண்டிருந்தன. மந்த கதியுடன் காலை வெளிச்சம் வெளிப்பட்டது. மூசாப்பாக பரந்த வானம் தெரிந்தது. மெல்லிய தூறலோடு அன்றைய காலை ஆரம்பமாகியது.

அழுது அழுது வீங்கிய முகத்தோடு அந்த அறைக்குள் ஆயிஷா முடங்கிக் கிடந்தாள். சொல்லொணா சோகம் இதயத்தையும் கண்களையும் ஆட்கொண்டிருந்தன. கண்ணீர் மழை கடிவாளமின்றி ஆறாய்ப் பெருகியது. எவ்வளவு அழுதாலும் மனதின் பாரம் இறங்கவில்லை. சொந்தமின்றிப் பந்தமின்றித் தனிமைக்குள் சிறைப்பிடிக்கப்பட்டு இருந்தாள் ஆயிஷா. அவளது நான்கு வயது மகளும் அவளின் அழுகையை பார்த்து மலங்க மலங்க விழித்துக் கொண்டிருந்தாள். இந்தச் சோகம் வாழ்வில் ஏன் எனக்கு மட்டும் வந்தது என்று யோசித்துக் கொண்டே இருந்தாள். உடலும் உள்ளமும் விம்மி விம்மிச் சோர்வை அடைந்திருந்தன.

ஆயிஷா கணவனை இழந்தவள். அவளும் அனேக கனவுகளுடன் அனேக எதிர்பார்ப்புகளுடனும்தான் தனது வாழ்க்கையை ஆரம்பித்தாள். நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்தவள். தகப்பன் கூலித்தொழிலாளி. வீட்டிலே மூத்த மகள் அவள். ஒரு சகோதரன் மாத்திரம் அவளுக்கு இருந்தான். ஊரின் ஒதுக்குப்புறத்தில் அவர்களுக்குச் சொந்தமாய் இருந்த காணி ஒன்றில் குடிசை வீட்டில் வாழ்ந்து வந்தார்கள். தகப்பனின் உழைப்பிலே வாழ்க்கை மெதுவாக ஓடிக்கொண்டிருந்தது. தகப்பனின் உழைப்பில் எதிர்காலம் அவளுக்கு நன்றாக அமையும் என்று தோன்றவில்லை. ஆதலால் வெளிநாடு சென்று உழைப்பது என்று முடிவெடுத்தாள். அவ்வாறே மிகவும் கஷ்டத்துக்கு மத்தியில் வெளிநாடு சென்று தனக்கென்று ஒரு வீட்டைக் கட்டினாள். வெளிநாட்டு உழைப்பில் அச்சிறு குடும்பத்தின் வாழ்க்கை சிறிது வளம் பெற்றது. குடிசை வீடு கல் வீடாக மாறியது. குடும்பம் கொஞ்சம் சந்தோஷத்தை அனுபவித்தது.

நாடு திரும்பிய அவளுக்கு பெற்றோரின் தீர்மானத்தில் திருமணம் இனிதே நடந்தேறியது. ஆரம்ப காலத்தில் திருமண வாழ்வு மிகவும் சந்தோஷமாகத்தான் இருந்தது. ஒரு பெண் குழந்தையையும் ஆயிஷா பெற்றெடுத்தாள். கணவனின் நடவடிக்கைகள் சிலநேரம் சந்தேகத்தை ஏற்படுத்தினாலும் அவள் கண்டு கொள்ளவில்லை. இரவில் காலம் தாழ்த்தி வீட்டுக்கு வருவது, எடுத்ததற்கெல்லாம் எரிந்து விழுவது, வீட்டுத் தேவைகளில் கவனம் செலுத்தாது இருப்பது என்று கணவனுடைய செய்கைகள் அதிருப்தியை அளித்துக் கொண்டிருந்தன. அவன் முன்னாள் காதலியுடன் தொடர்புடன் இருப்பதும் அவளுடன் வாழ்வதற்கு முடிவெடுத்திருப்பதும் பின்னர்தான் தெரியவந்தது. சொல்லிவைத்த மாதிரி ஒருநாள் அவளை விட்டும் போய்விட்டான். மனதுக்குள் ஆயிரம் வேதனைகளோடு எத்தனையோ முறை அழைப்பு விடுத்தும் அவன் பதில் தரவில்லை. கடைசியில் அவனது விவாகரத்துப் பத்திரமே கை வந்து சேர்ந்தது. ஒரு வேகத்தில் அவளும் முடிவெடுத்தாள். விவாகரத்தை ஏற்றுக் கொண்டாள்.

உற்றவரும் ஊர் ஜனங்களும் வாய்க்கு வந்த படியெல்லாம் கதைக்கத் தொடங்கினர். அதிஷ்டம் கெட்டவள், கணவனைக் கைக்குள் வைக்கத் தெரியாதவள், இவளிடம் என்ன குறையோ... என்றெல்லாம் அவதூறு பேசினர். ஆண்களின் துரோகம் அவர்கள் கண்ணுக்குப் படுவதே இல்லை. பெண்களையே சாபக்கேடாக இப்போதும் தூற்றிக் கொண்டிருக்கிறார்கள். இவள் என்ன பாவம் செய்தாள்? இரண்டு வயதுக் குழந்தையோடு தனிமரமாய் நின்றாள் ஆயிஷா. ஆயினும் கைத்தொழில் ஒன்றைத் தொடங்கி வாழ்க்கையை நடாத்திக்கொண்டிருந்தாள். அவளுக்கு அவள் தாய் தந்தையர் மிகவும் உறுதுணையாக இருந்தனர். படித்துக் கொண்டிருந்த சகோதரனும் இவர்களுடைய கஷ்டம் காரணமாக வெளிநாடு சென்று விட்டான்.

இவ்வாறு காலம் சென்று கொண்டிருந்தபோது கொறோனாப் பெருந்தொற்று அனைவரையும் அச்சுறுத்தும் வகையில் எல்லா இடங்களிலும் பரவிக் கொண்டிருந்தது. நாட்டு மக்கள் யாவரும் முடக்கப்பட்டு சமூக இடைவெளி பேணுமாறு கோரப்பட்டனர். அனைவர் மனதிலும் கடும் பீதி ஆட்கொண்டது. முகத்துக்கு முகம் பார்த்துக் கொள்ளவும் உறவினர்களைச் சந்தித்துக் கொள்ளவும் வாய்ப்புகள் அருகிப் போயின. மக்கள் அனைவருக்கும் மரணத்தைப் பற்றிய பயமே அதிகமிருந்தது. அதிகக் கவலையில் ஆழ்த்தும் ஒரு விடயமாக கொரோனாத் தொற்று உலகளாவிய ரீதியில் விஸ்வரூபம் எடுத்துக் கொண்டிருந்தது. கொரோனா மரணத்தைப் பற்றியே சனங்கள் அதிகம் பேசிக் கொண்டனர். ஜனாசாவை யாரும் பார்க்கவியலாது .தொழுகை நடத்த இயலாது .ஒரு பொலித்தீன் பையில் கட்டி இறுதி ஊர்வலத்திற்கு யாரும் இல்லாமல் இரு சுகாதார பணியாளர்களோடு மாத்திரமே அடக்கம் இடம்பெற்றது. மக்கள் அனைவரும் கதிகலங்கி விதியை நொந்தவாறு வாழ்க்கை நடத்தினர்.

ஒவ்வொரு தொகுதி தொகுதியாக ஊர் ஊராக கொரோனா ஆன்டிஜென் சோதனைகளும் பிஸிஆர் சோதனைகளும் நடந்துகொண்டிருந்தன. ஆம். ஆயிஷாவின் வீட்டுக்கும் சுகாதார ஊழியர்கள் வந்திருந்தனர். அப்போது அவளது தாய்க்கு சிறிது காய்ச்சல் கண்டிருந்தது. அந்தோ பரிதாபம் ஆயிஷாவும் அவள் மகளும் அவளது தாயும் கொரோனா நோயாளர்களாக அடையாளங் காணப்பட்டனர். அவளுடைய வீட்டையும் கொரோனா எனும் பிசாசு பிடித்துக் கொண்டது.

அவளது தாய் மருத்துவச் சிகிச்சைக்காக அருகில் உள்ள வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார். ஆயிஷாவும் மகளும் தனிமைப்படுத்தல் முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டனர். அவளுடைய தகப்பன் கொரோனா சோதனையில் நோய்த் தன்மை அற்றவராக வீட்டில் இருந்தார். குடும்பமே சின்னாபின்னமாகிப் போனது.

ஆயிஷாவின் தாய் கொரோனா நோய் தீவிரமடைந்து வைத்தியசாலையில் மரணம் ஆகிவிட்டார். செய்தி கேள்விப்பட்டதும் துடிதுடித்துக் கதறி அழுகிறாள் ஆயிஷா. எவ்வளவு பெரும் கோரம் இது. குடும்ப உறுப்பினர்கள் ஆளுக்கு ஒரு திசையில் சிதறிக் கிடக்க தாயின் மரணம் அதுவும் அகாலமரணம் அந்த குடும்பத்தையே திக்குமுக்காடச் செய்து விட்டது. கடைசித் தருணத்தில் தாயின் முகத்தைப் பார்க்கக் கூடக் கிடைக்கவில்லையே என்று அரற்றிக்கொண்டிருந்தாள் ஆயிஷா. யாரிடம் சொல்லி அழுவது.. யாரிடம் கேட்பது... ஆறுதல் சொல்ல உறவுகள் யாருமில்லை... அப்படி ஒரு பரிதாப நிலை... தனிமைப்படுத்தப்பட்ட அறையினுள் கண்ணீர் வெள்ளம் தரைதொட மயக்கமுற்று கிடக்கிறாள். பெற்றெடுத்துப் பாராட்டிச் சீராட்டி வளர்த்த தாயின் முகம் கண்முன்னே விரிந்து கவலையைப் பெரிதாக்கிக் கொண்டிருந்தது.

“அல்லாஹ் இந்த நிலைமை யாருக்கும் வரக்கூடாது எந்த மனிதருக்கும் வரக்கூடாது... என்று அவளது வாய் முணுமுணுத்த வண்ணம் இருந்தது. தனது சிறிய மகளை அணைத்த வண்ணம் குலுங்கிக் குலுங்கி அழுது கொண்டிருந்தாள். தகப்பனாருடன் தொலைபேசி அழைப்பினூடாகத் துக்கத்தையும் அழுகையையும் கொட்டிக்கொண்டிருந்தாள். எவ்வளவு கொடூரமாகக் கொரோனா மரணம் அவளது வாழ்வில் பலத்த பாதிப்பை ஏற்படுத்தி விட்டுச் சென்றுவிட்டது.

எத்தனை நாள் உணவு சாப்பிட்டாளோ எத்தனை நாள் தன்னுடைய தேவைகளை நிறைவேற்றினாளோ அவளுக்கு ஞாபகம் இல்லை. எதுவும் செய்யத் திராணியற்றவளாய் மனதளவில் உடைந்தவளாய்த் தொய்ந்து போனாள் அவள். இதெல்லாம் பொய்யாய் இருக்க கூடாதா என்று கூட அவள் எண்ணிக் கொண்டிருந்தாள். பித்துப்பிடித்தவள் போலானாள்.

காலமே எதற்கும் அருமருந்தாகும். அந்தப் பதினான்கு நாட்களும் நரக வேதனையாக ஆமை வேகத்தில் நகர்ந்து சென்றது. தனிமைப்படுத்தலிலிருந்து அவளும் அவள் மகளும் விடுவிக்கப்பட்டனர். வீடு சென்றனர். தகப்பனாரைக் கட்டியணைத்து கோவெனக் கதறி அழுதாள் ஆயிஷா. எங்குபார்த்தாலும் தாயின் நினைவே எட்டிப்பார்த்தது. எதைச் செய்தாலும் தாயின் எண்ணமே மேலோங்கி இருந்தது. என்ன செய்வது விதியின் ஏற்பாடு. இறைவனின் நியதி. நடந்து தானே தீர வேண்டும். காலம் செல்லச் செல்லக் கொஞ்சம் கொஞ்சமாய்த் தேறி வருகிறாள் ஆயிஷா. கொரோனாவின் தாக்கமும் மெதுமெதுவாகக் குறையத் தொடங்கியது. சாதாரணமான ஒரு வாழ்க்கைக்குள், பிடிப்பில்லாத ஒரு வட்டத்துக்குள் தன்னை ஈடுபடுத்துகிறாள் ஆயிஷா. தனது ஒரே குழந்தைக்காக தன்னை அர்ப்பணிக்கத் தொடங்கிவிட்டாள். வாழ்வில் ஒரு பெண் எத்தனை சுமைகளைத்தான், எத்தனை கஷ்டங்களைத்தான் தாங்குவது? பல நேரங்களில் யோசித்துக் கொண்டே இருப்பாள். சூனியமாக தோன்றும் எதிர்காலம் சில நேரம் அவள் மனதுக்குள் அச்சத்தை விளைவித்தது.

மறுமணம் செய்து கொள்ளும்படி வந்த உறவினர்களின் கோரிக்கைகளை அவள் ஏற்றுக் கொள்ளவில்லை. உதறித் தள்ளிக் கொண்டே இருந்தாள். தனது மகளின் எதிர்காலமே முக்கியம். அவளுக்கு எந்தவிதப் பாதிப்பும் வந்து விடக்கூடாது. அவளுக்குரிய அன்பில் எந்தக் களங்கமும் வந்துவிடக்கூடாது என்பதில் கவனமாக இருந்தாள்.

புதிதாக வரும் நபர் தனது மகளைச் சரியான விதத்தில் நடத்துவாரா என்று அடிக்கடி தன்னைத் தானே கேட்டுக் கொள்வாள். ஆனாலும் தகப்பனாரின் வற்புறுத்தல் நாளுக்குநாள் வலுவடைந்து கொண்டிருந்தது. ‘‘உன் வாழ்க்கைக்கு ஒரு பிடிமானம் வேண்டும். நான் எவ்வளவு காலம் சீவியத்தில் இருப்பேன். உன்னைக் கவனிக்க ஒரு நபர் வேண்டும் தானே’’ என்று கேட்டுக் கொண்டிருந்தார்.அவர் கதைக்கும் போதெல்லாம் சத்தமில்லாமல் அவ்விடத்தை விட்டு நகர்ந்து விடுவாள் ஆயிஷா.

மாதங்கள் கடந்தன. மறுமணம் தேடும் படலம் தொடர்ந்த வண்ணமே இருந்தது. ஒரு நாள் அவள் வீட்டின் முன் கார் ஒன்று வந்து நின்றது. அயலூரில் இருந்து இவளை மறுமணம் செய்து கொள்ள மனைவியை இழந்த ஒரு ஆசிரியர் முன் வந்திருந்தார்.

‘‘நீங்கள் ஒன்றும் சொல்லத் தேவையில்லை. எல்லாம் அறிந்தே நாங்கள் உங்களிடம் சம்பந்தம் வைக்க வந்திருக்கிறோம். உமது மகளின் மகளை எனது மகள் போலவே நான் பார்ப்பேன், வளர்ப்பேன். அதில் நீங்கள் எந்தச் சந்தேகமும் அடையத் தேவையில்லை. இது அல்லாஹ்வின் மீது ஆணை...

என்று அந்த மனிதர் தனது தந்தையுடன் தீர்மானமாக உரைப்பதைக் காதுபடக் கேட்டுக் கொண்டிருந்தாள் ஆயிஷா. கண்கள் பனிக்க இறைவனுக்கு மனதார நன்றி சொல்லிக் கொண்டு இருந்தாள்...

அல்ஹம்துலில்லாஹ்... எல்லாப் புகழும் இறைவனுக்கே...

இந்தச் சுமை தாங்கிப் பெண்ணுக்கு இனிமேல் வாழ்வில் வசந்தம் மட்டுமே...

சந்தோஷங்கள் மட்டுமே... இறைவன் மகா கிருபையாளன்...

(முற்றும்)



# பெண் புத்தி பொன் புத்தி

கலைத் தாரகை
ஏரூர் ஜிப்ரியா

பெண்:- குருநெல் சோறாக்கி
குளத்து மீனு கறியாக்கி
திராயும் சுண்டி வச்சேன்
திரயாம ஆனம் வச்சும்
இன்னும் தின்னத்தான் தோனலியோ

ஆண்:- வலை பொத்தி முடியலியே
வாரேன் கொஞ்சம் இருடி புள்ள
வெற்றுக்குடல் குறுகுறுக்க
வேணுமென்றா நானிருக்கேன்

பெண்:- அக்கம்பக்கம் ஆக்கலியாம்
கோப்பையில கொஞ்சம் கொடுத்து வாரேன்
குளிச்சிட்டு நீங்க வாங்க குழந்தையும் பசியோட காத்திருக்கு

ஆண்:- இந்தா வாரேன் இருடி புள்ள
இடுப்பு சரியா கடுக்குதடி
ஏறி கொஞ்சம் மிதிச்சு விட்டா
எழுந்து நடக்க நல்லாயிருக்கும்



பெண்:- சுபஹுக்கு எழுந்த நான்
இன்னும்தான் இருக்கயும் இல்ல
கொஞ்ச நேர வேலைக்கு இடுப்பு வேற கடுக்குதாக்கும்

ஆண்:- ஓடியாடி வேல செஞ்சா
ஒரு நோயும் இல்லதான்
ஒத்துக்கிறேன்டி தங்கம்
ஒரு தடவ மிதிச்சு விடமாட்டியோ

பெண்:- கல்பன்பாய் விரிச்சிருக்கு
கைகழுவ கோப்ப வச்சிருக்கு
பொன்னெழுத்து பீங்கானில் சோறு
வெள்ள தச்சதட்டில் மூடியிருக்கேன்
வேண்டுமட்டும் தின்னுங்க

ஆண்:- தின்டு முடிய சுருட்டு வேணும்
தம்பியன கொஞ்சம் அனுப்பியெடு
தும்பிபோல பறந்து போவான்
திரும்பி வாரதுக்குள்
தின்டு நானும் முடிச்சிருப்பேன்

பெண்:- குருட்டுக்கத கதையாதீங்க
சுருட்டு வாங்க அனுப்பினா
திருட்டுத்தனமா குடிக்கப்பார்ப்பான்
சுறுத்து சாட்டு சொல்ல ஒன்னா
காரணம் நீங்கதான் கடைசியில சொல்லி நிப்பான்

ஆண்:- ஓமடி புள்ள உண்மைய சொன்னாயடி
ஒழுங்கைக்கு ஒன்பது
ஒழுக்கமற்று நிக்கிதென்றா
பெத்தவங்களும்தான் காரணமடி

பெண்:- பெண்புத்தி பின்புத்தி என்றீக
பெண்புத்தி பொன்புத்திதானுங்க
எங்க அரும தெரிஞ்சி வாழ்ந்தா எல்லோருக்கும் நல்லமுங்க

# சமூக உறவில் பெண்களின் பங்கு

## – ஓர் இஸ்லாமிய பார்வை ...

சமூக வாழ்வில் பெண்களின் உறவு என்பது மிக முக்கியமானதாகும். “சமூகத்தில் ஒரு பகுதியினர் ஆண்கள் அடுத்த சம பகுதியினர் பெண்கள்” எனும் போது அந்த அடுத்த பகுதியினர் ஒடுக்கப்பட்டு, முடக்கப்பட்டு செயலற்று கிடக்குமானால் சமூகம் எழுச்சியடைவதும் தாமதமாகும். அப்படியானால் இங்கு ஆணும் பெண்ணும் சம அந்தஸ்துடையவர்களா? அவள் சமூக உறவை அமைத்துக் கொள்ள முடியுமா என்ற வினா எழுகின்றது. இஸ்லாம் வாழ்வின் சகல துறைகளுக்குமான மிதமான தீர்வை வழங்கும் மார்க்கம் என்ற அடிப்படையில் பெண்ணின் சமூக உறவு பற்றியும் மிகத் தெளிவாகப் பேசுகிறது.

பெண் என்பவள் எதிர்காலப் பரம்பரையை உருவாக்கும் அதி உன்னத பொறுப்பு வாய்ந்தவள். அதற்கேற்ப அவளது உடல், உள அமைப்புக்கள் இறைவனால் சிருஷ்டிக்கப்பட்டுள்ளது. இதற்காக அவள் வீட்டில் அடைபட்டுக் கிடக்க வேண்டும் என்பது பொருள் அல்ல. இஸ்லாம் பெண்களை வீட்டை விட்டு வெளியேறி சமூகக் களம் ஏன் போர்க்களம் கூட செல்ல அனுமதி வழங்கியுள்ளது. ஆனால் அது வீட்டுப் பணிக்கு பாதகமாக அமையக் கூடாது என்பதில் மிகக் கவனமாக போதனை வழங்குகிறது.

இஸ்லாத்தின் பார்வையில் பெண்களின் சமூக உறவை ஆராய்வதற்கு முன்னர் பெண்கள் மற்ற சமூகங்களில் எவ்வாறு நடத்தப்பட்டார்கள் என்று புரிந்து கொள்வது இஸ்லாம் பெண்களுக்கு வழங்கியுள்ள மாண்பை அறிந்து கொள்ள ஏதுவாக இருக்கும். கிரேக்க சமுதாயத்தில் பெண்கள் விற்பனை பொருளாகவும் உரிமைகள் மறுக்கப்பட்டவர்களாகவும் இருந்தனர். சீனர்கள் பெண்களை விற்கவும் எரிக்கவும் செய்தனர். யூதர்கள் பெண்களை சாபத்துக்குரியவர்கள் என்று கருதினர். மேலும் 19 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதி வரை ஆங்கிலேயர் பொதுச்சட்டப்படி பெண்கள் பிரஜாவுரிமை அற்றவர்களாகவும் மற்றும் எந்த வொரு உரிமையும் வழங்கப்படாதவர்களாகவும் காணப்பட்டனர். இஸ்லாத்திற்கு முன்பு வரை பெண்கள் புண்களாக எண்ணப்பட்டு, ஈனப்பிறவிகளாகவே பார்க்கப்பட்டார்கள். பெண் பிள்ளை பிறந்தால் உயிரோடு புதைத்தார்கள். இவ்வாறு அகிலம் முழுவதும் பெண்ணினத்திற்கு அளிக்கப்பட்டு வந்த கொடுரங்கள் ஏராளமானவை. இவை அனைத்து அநியாயங்களையும் விட்டு பெண்களை பாதுகாக்க இஸ்லாம் வருகை தந்தது. பெண் குழந்தை பிறந்தால் அதை “நற்செய்தி” எனக் குறிப்பிடுகின்றது.

பெண்கள் பற்றிய எண்ணக்கரு சமூக நிலை மிகுந்த கருத்து வேறுபாட்டையும் அதி தீவிர கொள்கையையும் உள்ளடக்கிய பிரச்சினையாகும். எனினும், இஸ்லாம் சமநிலை பண்பு கொண்ட கொள்கை என்ற வகையில் உரிமைகளிலும் சட்டங்களிலும் ஆண்களுக்கும் பெண்களுக்குமிடையே சமநிலையை ஏற்படுத்தியிருக்கின்றது. இஸ்லாத்தில் ஆண் பெண் சமத்துவம் என்பது உண்மை. இருவருக்கும் சம அந்தஸ்தை கொடுக்கும் இஸ்லாம் சமூக வாழ்வில் இருவரும் ஒருவருக்கொருவர் உதவியாக வாழ்வது அவசியம் எனக் காண்கிறது. “ஒருவரையொருவர் பூரணப்படுத்தும் இரு சமூக அலகுகளே ஆணும் பெண்ணும் என்பதே” இஸ்லாத்தின் கருத்தாகும்.

பெண்களுக்கு சம உரிமை, சம அந்தஸ்து வழங்கப்பட வேண்டும் என்று கோசங்கள் ஆர்ப்பாட்டங்கள் நடாத்தப்பட்டுவரும் சூழலில் 1400 ஆண்டுகளுக்கு முன்பே பெண்களுக்கு சம உரிமை, சம அந்தஸ்து வழங்கிய மார்க்கம் இஸ்லாம். ஆணைப் போலவே பெண்ணும் மார்க்க விடயங் களில் பொறுப்புமிக்கவள் என்று இஸ்லாம் கூறுகின்றது. இஸ்லாம் பெண்களுக்கு செல்வம் சேகரிக்கவும், கொடுக்கல் வாங்கலில் ஈடுபடவும், கருத்து வெளியிடவும் அவளுக்கு பூரண உரிமை உண்டு. மேலும் வாரிசுச் சொத்தில், தனக்கு ஏற்ற கணவரை தெரிவு செய்வதில் ஏன் தனக்கு பொருத்தமின்றேல் கணவ னிடத்தில் விவாகரத்து கோருதல் போன்ற அம்சங்களில் உரிமைகளை வழங்கியிருக்கிறது.

**தற்கால சமூகத்தில் பெண்களது சமூகப் பிரவேசம் கட்டாயமாக தேவைப் பாடுடையதாக காணப்படுகிறது. வீட்டுக்கு உள்ளேயும் வெளியேயும் பெண்ணுக்கு உரித்தான பல கடமைகள் உண்டு. பெண்களுக்கு தொழுகைப் பயிற்சி, மருத்துவம், தாதிய சேவை, பெண்களின் நலனை மேம்படுத்தும் சமூக சேவை, பெண் ஜனாஸாவை குளிப்பாட்டல், ஆண்களிடம் கேட்க முடியாத பெண்கள் தொடர்பான மார்க்கப் பிரச்சினை போன்றவற்றில் அவளின் பங்களிப்பு மிக அவசியமாக காணப்படுகின்றது**

அறிவைத் தேடுவதைப் பொறுத்தவரை அது ஒவ்வொரு முஸ்லிமான ஆண் பெண் மீதும் கடமையாகும். இஸ்லாமிய வரலாற்றில் ஆண்கள் பெண்களிடம் சென்று கல்வி கற்ற வரலாறுகள் காணப்படுகின்றன. இஸ்லாத்தில் பெண்கள் மார்க்கம் கூறும் வரையறைகளுடன் மார்க்கக் கல்வி, உலகக் கல்விகளை பெற்றுக் கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தான் பெற்ற கல்வியின் மூலம் அவள் சமூகத்திற்கு பெரும் பங்காற்ற வேண்டிய தேவை காணப்படுகின்றது. பெண் சமூகத்திற்கு இஸ்லாமிய அழைப்பை மிகச் சரியாகவும் தெளிவாகவும் முன்வைத்து ஒரு சமூக மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு தகுதியுடையவளாக தன்னை வளர்த்துக் கொள்ள வேண்டும்.

மேலும், இஸ்லாம் நன்மையை ஏவி தீமையை தடுப்பதை இருபாலாரின் சமூக கடமை என வலியுறுத்துவதன் மூலம் சமூக உறவில் பெண்களின் பங்கு மிக அவசியம் என்பது தெளிவாகிறது. அத்துடன் அவசியம் என்று கருதுகின்ற போது இஸ்லாத்தின் வரையறைகளை தாண்டாது இஸ்லாத்தின் ஒழுக்க மாண்புகளை மீறாமல் அவள் தொழில் புரிவதனை இஸ்லாம் ஒரு போதும் மறுக்கவில்லை.

பொதுவாக பெண்களிடமோ, ஆண்களிடமோ காணப்படாத ஒரு திறமை, ஆற்றல் ஒரு குறித்த பெண்ணிடம் காணப்படுமாயின் அதனைப் பயன்படுத்த வேண்டும். தற்கால சமூகத்தில் பெண்களது சமூகப் பிரவேசம் கட்டாயமாக தேவைப் பாடுடையதாக காணப்படுகிறது. வீட்டுக்கு உள்ளேயும் வெளியேயும் பெண்ணுக்கு உரித்தான பல கடமைகள் உண்டு. பெண்களுக்கு தொழுகைப் பயிற்சி, மருத்துவம், தாதிய சேவை, பெண்களின் நலனை மேம்படுத்தும் சமூக சேவை, பெண் ஜனாஸாவை குளிப்பாட்டல், ஆண்களிடம் கேட்க முடியாத பெண்கள் தொடர்பான மார்க்கப் பிரச்சினை போன்றவற்றில் அவளின் பங்களிப்பு மிக அவசியமாக காணப்படுகின்றது.

அடுத்ததாக குடும்பம் என்ற அமைப்பில் பெண்ணின் பங்களிப்பு மிக மிக அத்தியவசியமாக அமைந்துள்ளது. அந்த வகையில் பெண்களது மன உணர்வுகளும், உணர்ச்சிகளும் மென்மைத் தன்மைகளுமே குடும்ப அலகை கட்டியெழுப்புவதற்கான முக்கிய மூலக்கூறுகளாகும். எதிர்கால சந்ததியினரை ஒரு நற்பிரஜையாக சமூகத்திற்கு பிரயோசனமுள்ள குழந்தையாக வளர்த் தெடுப்பதில் தாயின் பங்கு அளப்பெரியது. இதற்காக தாய் கல்வியறிவு பெற்றிருக்க வேண்டும். பெண்கள் முன்னேறவும் அவளால் சமூகம் பயனடைய வேண்டுமாயின் அவள் ஸஹாபாப் பெண்மகளின் காலத்தை நோக்கி மீள வேண்டும். அன்று மனைவியாக, தாயாக இருந்து கொண்டே மார்க்க விடயங்களில் மட்டுமல்ல போர்க்களத்தில் மருத்துவம் செய்த ஸஹாபியப் பெண்களின் வாழ்க்கை வரலாற்றை முன்னுதாரணமாக கொண்டு சிறந்த திட்டமிடலுடன் கணிசமான நேரத்தை பயன்படுத்தி குடும்பம் என்ற அமைப்பினை சிறப்பாக இயக்குவது பெண்களின் கைகளில் தான் தங்கியுள்ளது.

பெண் பற்றிய இஸ்லாமிய சிந்தனையின் அடுத்த முக்கியமான விடயம் சமூக நடவடிக்கைகளில் அவளின் ஈடுபாடு பற்றியதாகும். அவர்கள் நற்பணிகளில் ஈடுபடும் போது அல்லாஹ் கூலி கொடுக்கின்றான். நபி (ஸல்) அவர்களது காலத்தில் பெண்கள் கலந்து கொள்ளாத எந்த யுத்தமும் நடைபெறவில்லை எனுமளவிற்கு ஜிஹாதில் பெண்களது பங்களிப்பு காணப்பட்டது. இவ்வாறு இறைதூதர் (ஸல்) அவர்களின் காலத்திலும் அதற்குப் பிற்பட்ட காலங்களிலும் அனைத்து வகை சமூக நடவடிக்கைகளிலும் பெண்கள் நல்ல சமூக ஈடுபாடு கொண்டவர்களாகவே இருந்தனர் என்பதை வரலாற்றின் மூலமாக அறிந்து கொள்ள முடிகின்றது. ஒருபோதும் பெண்கள் அக்காலப் பிரிவில் சமூக அக்கறை அற்றவர்களாகவோ, எந்தவித அறிவும் அற்றவர்களாகவோ முடக்கி வைக்கப் படவில்லை. அவர்கள் வீட்டு வேலைகளோடு தம்மை மட்டுப்படுத்திக் கொள்ளவில்லை.

எனவே, இஸ்லாத்தின் பார்வையில் பெண்களுக்கு சம அந்தஸ்தும் உரிமைகளும் வழங்கப்பட்டு சமூக உறவில் அவளின் பங்கு அளப்பெரியதாக இருந்த போதும் இப் பணிகளை மேற்கொள்ளும் போது இஸ்லாம் பெண்களுக்கு சில ஒழுக்க நடைமுறைகளை அறிமுகப்படுத்தியிருக்கின்றது. ஒரு பெண் தன் இல்லத்தி லிருந்து வெளியே செல்லும் போது முகம், முன் கைகள் தவிர்ந்த மற்றைய உடல் முழுவதையும் இஸ்லாம் கூறும் நிபந்தனைகளுக்கு அமைவாக மறைத்துக் கொள்வது அவள் மீது கடமையாக்கப்பட்டுள்ளது.

பெண் சமூகத்திற்கு வரும்போது கல்வி, வேலைவாய்ப்பு என்பவற்றில் பங்கு கொள்வதோடு அவள் ஒழுக்க சீலங்களை கண்டிப்பாக பேணிக் கொள்ள வேண்டும். அந்நிய ஆணுடன் தனித்திருத்தல், குழைந்து பேசுதல், தொட்டுப் பழகுதல் என்பன விபரீத விளைவுகளை ஏற்படுத்தி விடும்.

எனவே, இவ்வாறான சமூகக் களத்தில் நுழையும் போது இஸ்லாமிய ஒழுக்க மாண்புகளுடன் நடந்து கொள்ள வேண்டும். இவ்வாறான இஸ்லாமிய அறிவு ஞானத்துடன் ஒழுக்க விழுமியங்களுடனும் எமது பெண்கள் தமது சமூக தொடர்புகளை ஆக்கிக் கொள்வார்களேயானால் அதன் மூலம் அவர்கள் சிறந்த ஒழுக்கமுள்ள தனிமனிதர்களை உருவாக்கி அதனூடாக இஸ்லாமிய சமூகத்தை கட்யெழுப்ப மிகப் பெரும் பங்களிப்பு செய்யலாம்.

**திருமதி. எஸ்.எஸ். மர்ஜானா**

**அபிவிருத்தி உத்தியோகத்தர் - பிரதேச செயலகம், ஏறாவூர் நகரம்**

# பிரசவ அறை பேசுகிறது...

தலை வணங்குகிறேன்
தலை நிமிர்ந்து நடந்திடும்
மனித குலத்தின் மகளிர்களை..

நான்கு சுவர்கள் என்று தான்
முடங்கிக் கிடந்தேன்– கரு ஒன்று
உருவாக உருவெடுத்ததில் உயிர்ப்புற்றேன்–
நான் தான் பெண்ணின் தியாகி என்று.

அடுப்பின் அகராதிப் பொருள் மட்டுமே
பெண்மை என எண்ணும் ஆண்மை வாதிகளே!
நான் பேசுகிறேன் – உங்களுடன் தான்

கண்களை மூடிடச் செய்திடும்
விதமான உபகரணங்களும் சுமந்த அறை–நான்
என்றிருந்தாலும் கூட என் உணர்வுகளை
விழிக்கச் செய்துவிடுகிறது பெண்மை எனும் தாய்மை.

தினம் தினம் வீறிட்டு அழும்
சத்தங்களையே தான் நான் சுவாசிக்கின்றேன்.
பெண்ணியம் என்று மட்டுமே முழங்குகிறீர்கள்.
அவள் கண்ணியத்தை பிடித்தெறிந்து விட்டு.

பிரம்மித்து நிற்கின்றேன்– வரிகள் எவ்வாறு
வரைந்து உணர்த்தலாம் என்று.
மீண்டும் திரும்பிச் செல்வோமா?
என்ற சந்தேகக் கிடங்கில்
ஓர் உயிரை உறவாகத் தருகிறாள்.


பத்து மாதங்கள் படாத வலிகளில்லை
இருந்தும் பத்திரமாய் பாதுகாக்கிறாள்
அவள் துடி துடித்துப் போகும்
அந்த வலியை நீர் நானாக
இருந்தாலும் உணர முடியாது…..

கண்கள் குளமாக – அவள்
நிலைவலைகள் எங்கோ நிலை குலைத்த
அவள் உதடுகள் உதறிய படி
தடுமாற – உலறிடும் அவள் வார்த்தைகள்.

இப்படி அத்தனையும் அவள்
சிரிப்பால் மறந்து போகிறாள்– தன் வாரிசின்
அழுகைச் சத்தத்தில்
ஆண் மகனே!
பெண்ணை காணும் – என்
கண்கள் ஒரு நாளும் உன்னைக்
கண்டதில்லை – ஆதலால்
நீ மனித குலத்தின் மகிமை குன்றியவனும் அல்ல
உன் மகிமை எல்லாம்
பெண்ணை பொன்னாக
மதித்திடும் உன் உணர்வுகளுடன் தான்..

உன்னை சுமந்தவளும் பெண்ணே.
உனக்காக சுமப்பவளும் பெண்ணே
தியாகத்தின் உச்சம் பெண்ணே எனும்
மகிமையை என்றும் நீ போற்றிட வேண்டும்.

**சஸ்னா உஸைம், ஏறாவூர்.**



# ஒரு மொட்டு மலர்கிறது

சமையலறையில் பாத்திரங்களை கழுவிக்கொண்டிருந்த சபிய்யாவின் கண்களில் இருந்து குழாயிலிருந்து வடியும் தண்ணீரைவிட கண்ணீர் அதிகமாக வழிந்தோடியது. ஏக்கப் பெருமூச்சுடன் பாத்திரங்களை பார்த்தாள். கழுவி முடிப்பதற்கு இன்னும் ஒரு மணித்தியாலம் வேண்டும் போலிருந்தது.

வீட்டில் யாரும் இல்லை. மயான அமைதி நிலவியது. தொடர்மாடி வீடு என்பதால் அவரவர் பிரச்சினை நான்கு சுவர்களுக்குள்ளேயே அடங்கிப் போகின்றது. கால்கள் கடுக்க அருகில் இருந்த கதிரையில் அமர்ந்தாள் அந்த இளம் சிட்டு. கண்களில் நீர் வழிந்தோட நினைவுகளும் பின்னோக்கி ஓடலாயிற்று.

சபிய்யாவின் தாய் தந்தைக்கு இவள் ஒரே பிள்ளை. தாய் சிறு வயதிலேயே நோய்வாய்ப்பட்டு இறந்துவிட தந்தையினால் இவளை பராமரிக்க முடியவில்லை. ஊரிருக்கும் நிலையில் யாரிடமும் விட மனமும் இல்லை. கொழும்பிலிருக்கும் தனது சகோதரியிடம் மகளை ஒப்படைத்துவிட்டு அவர் வெளிநாடு சென்றுவிட்டார். நான் மகா ராணியைப்போல் பார்த்துக் கொள்வேன் நீங்கள் கவலைப்பட வேண்டாம். நான் கொழும்பில் இருக்கும் பெரிய ஸ்கூலில் சேர்த்து விடுகிறேன். நீங்க யோசிக்காதீங்க தைரியமாக போங்க எனக் கூறி அவனை சம்மதிக்க வைத்தாள். மாமியின் வார்த்தைகளும் அவரது பாசமும் சபிய்யாவையும் வாப்பாவையும் நம்பவைத்தன.

**எஸ். பூநோனா, அபிவிருத்தி உத்தியோகத்தர், (தே.அ.அ பிரிவு)**

தந்தையை விமானத்தில் ஏற்றி விட்டு மாமியின் வீட்டிற்கு வந்த சபிய்யா அவரின் வீட்டை கண்டு பிரமித்தாள். கிராமத்தில் வளர்ந்த அவளுக்கு எல்லாம் புதிதாக இருந்தது. ஊரிலிருந்து வந்து ஒரு கிழமை இருக்கும் காலை 5.00 மணிக்கு தொழுவதற்கு எழும்பிய சபிய்யாவை மாமி படுக்கையிலிருந்து அழைத்தாள். என்ன என்று கேட்ட போது தனக்கு உடம்பு முடியவில்லை எனவும் சமையலறையை சுத்தம் செய்யுமாறும் கூறினாள். தாய் நோயிலிருக்கும் போது அவருக்கு உதவி செய்து பழக்கப்பட்டதால் அவளுக்கு அது பெரிதாகத் தெரியவில்லை. சுத்தம் செய்து முடிப்பதற்குள் மாமியின் பிள்ளைகள் பாடசாலை செல்லும் அவசர கதியில் அதனை அழித்துக் கொண்டிருந்தார்கள்.

சமையலறையை சுத்தம் செய்த பின் வீட்டை துப்பரவாக்கி மொப் செய்தவளை மீண்டும் அழைத்த மாமி, அழுக்கு துணிகளை பாத்ரூமில் வைக்குமாறு கூறிவிட்டு அவளும் சபிய்யாவுடன் வந்தாள். எனக்கு இடுப்பு வலி அதிகமாக இருக்கு இதை கொஞ்சம் கழுவிப்போடுங்க எனக்கூறினாள்.

சபிய்யா எதுவும் மறுக்காமல் மாமி கூறிய வேலைகளைச் செய்து முடிப்பதற்குள் பகல் 12.00 மணியை தாண்டிவிட்டது. சமைத்து கொண்டிருந்த ஆயிசா அவளை “அதை இதை செய்யுங்க” என ஏவிக் கொண்டேயிருந்தாள். ஆரம்பத்தில் சபிய்யாவிற்கு இது பெரிதாக தெரியவில்லை. பின்னர் தான் புரிந்து கொண்டாள் மாமி தன்னை வீட்டிற்கு வேலைக்காரியாகத்தான் கொண்டு வந்திருக்கிறாள் என்று.



காலப்போக்கில் அந்த வீட்டில் சபிய்யா முழு நேர வேலைக்காரியானாள். பாடசாலைக்கு செல்லும் ஆசையை ஆரம்பத்தில் கூறிய போது “நீ எங்க புள்ள பஸ்ஸில ஏறிப்போகப்போறா” இங்கத்தைய ரூட்டெல்லாம் உனக்கு தெரியாது. நாளைக்கு ஏதாவது நடந்தால் நான் தான் பதில் சொல்ல வேண்டும்” எனக்கூறி அதுக்கும் முற்றுப்புள்ளி வைத்தார். தந்தையுடன் போன் பேசும் போதும் மாமியும் அருகில் இருந்ததால் அவளால் எதுவும் சொல்ல முடிவதில்லை. மாமி தன்மகளுக்கு உடுப்பு வாங்கினால் அவளின் பழையது இவளுக்கு புதியதாகும் ஆனால் இவ்வளவு கஸ்டத்துக்கு மத்தியிலும் சபிய்யா இறைவனை துதிப்பதற்கு மறப்பதில்லை. தஹஜ்ஜத்துடைய நேரத்தில் அவளுடைய கைகள் இறைவனிடம் கையேந்த தவறுவதில்லை.

வீட்டிற்கு யாரும் வந்தால் அவர்களிடம் சபிய்யாவை தன்மகள் போல் தான் பார்ப்பதாகவும் நான் வேலை செய்ய வேண்டாம் என்றாலும் அவ கேட்கிறல்ல. “மாமி உங்களுக்கு சுகமில்லை தானே நீங்க இருங்க நானே செய்வேன்” என எல்லாவற்றையும் இழுத்து போட்டு செய்வதாக பொய் கூறுவாள். கண்களினாலே அவள் கூறும் அசைவுகளுக்கு பழக்கப்பட்டு போன சபிய்யாவும் வந்தவர்களை பார்த்து புன்னகைத்தவாறு சென்று விடுவாள்.

காலச்சக்கரம் யாருக்காகவும் காத்திருப்பதில்லை. சபிய்யாவிற்கும் 19 வயதாகி விட்டது. இதற்கிடையில் ஒரு தரம் நாட்டிற்கு வரப்போன தந்தையை ஏன் இப்ப வறப்போறீங்க வீட்டை கட்டிட்டு வாங்க நாம நல்ல மாப்பிளையை பேசி முடிப்போம். இப்ப இருக்கிற விலைவாசிக்கு நீங்க வந்தா அரைகுறையாகத்தான் முடியும் எனக்கூறி அவரின் வருகையையும் நிறுத்தி விட்டாள்.

இன்றும் மாமியின் வீட்டிற்கு ஆரிபா தாத்தாவின் குடும்பம் வெளியூரிலிருந்து சாப்பாட்டிற்கு வந்திருந்தார்கள். தடல்புடலான பெரிய விருந்து மாமி ஒரு வழி பண்ணி விட்டார் சபிய்யாவினுடைய கால்கள் கழன்று விழும் போல் இருந்தன.

முகம் வாடிப்போய் விட்டது. இதனை சாட்டாக வைத்து சபிய்யாவை யும் வெளியில் போக அழைத்த ஆரிபாவிடம் “சபிய்யாவிற்கு உடம்பு சுகமில்லை காய்ச்சல் எனக்கூறினாள் அதற்கு சபிய்யாவும் “ஓம் அண்டி நீங்க போங்க என்னால முடியல்ல எனக்கூறினார்.

ஆனாலும் ஆரிபா சபிய்யாவின் கண்களிலிருந்து ஏக்கத்தினை அவதானித்தாள். அவள் இங்கு இரண்டு மூன்று தரம் வந்திருக்கிறாள். அப்போதெல்லாம் இதை அவதானித்து கொண்டே இருப்பாள். ஓடி ஓடி சபிய்யா வேலை செய்வதும் நீங்க வைங்க சபிய்யாம்மா! என ஆயிஸா கூறுவதும் நாடகம் தான் என புரிந்து கொண்டாள். சபிய்யாவின் நன்நடத்தையும், ஒழுக்கமும், இறையச்சமும் அவளை வெகுவாக கவர்ந்திழுத்தன. அவள் இன்று ஆயிசாவின் வீட்டிற்கு சாப்பாட்டிற்கு வந்த நோக்கமும் சவூதியிலிருந்து வந்த தன் தம்பிக்கு சபிய்யாவை மணம் முடிக்கும் எண்ணத்துடன் தான் அதை யாரிடமும் சொல்லாமல் எல்லாவற்றையும் அவதானித்துக் கொண்டிருந்தாள்.

இரவு ஏழு மணிக்கு ஆயிசாவுடன் வீடு திரும்பிய ஆரிபா தாத்தா வீட்டினை நோக்கினாள். அப்போது தான் பெயின்ட் பண்ணியது போல் அவ்வளவு துப்பரவாக இருந்தது. எல்லோருக்கும் டீ கொடுத்துக் கொண்டிருந்த சபிய்யாவை அருகில் அழைத்து இருத்திய அவள் அவளது தலையை கோதி விட்டு “உடம்பு எப்படி இருக்கு எனக் கேட்டாள்” சபிய்யாவிற்கு தன் தாயின் நினைப்பு வர கண்கள் குளமாகியது. என்றாலும் அதைக் காட்டிக் கொள்ளாமல் “ஓம் அண்டி நல்லம்” என கூறி எழுந்தாள். அப்போது தான் ‘கரண்டும் கட்டாக’ சபிய்யாவின் தந்தையும் அழைப்பு எடுத்தார். ஆயிசா நானாவுடன் உருகி உருகி பேசினாள். இதைப் பார்த்த ஆரிபா “ஆயிசா கொஞ்சம் தாங்க கரீம் நானாவிடம் நானும் பேசுகிறேன்.” என தொலைபேசியை வாங்கியவள் இவரிடம் நலம் விசாரித்து விட்டு “நானா உங்களிடம் ஒன்று கேட்கப் போகிறேன். “உங்கட மகள் சபிய்யாவை எனது தம்பி அப்துல்லாஹ்வுக்கு முடிக்க எங்களுக்கு முழு விருப்பம். அவர் சவூதியில் மௌலவியாக இருக்காரு முடிச்சிட்டு அங்க தான் கொண்டு வச்சிருப்பாரு உங்கட முடிவு என்ன” என்று கேட்டாள்.

“உங்கட குடும்பத்தில தாரத்துக்கு நான் ஏன் யோசிக்கனும் எறும்புக்கு கூட தீங்கிழைக்கக் கூடாது என நினைக்கும் ஆட்கள் நீங்க, எனக்கு பரிபூரண சம்மதம் அல்லாஹ் என்ட மகளுக்கு நல்லதொரு வாழ்க்கையை கொடுத்திருக்கான் தான் நிம்மதியா மௌத்தாகுவேன். ஆயிசாவிற்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை அவளால் எதுவும் சொல்ல முடியவில்லை. ஏதாவது காரணம் காட்டி கொஞ்சக்காலம் வீட்டிற்கு சம்பளமில்லாத வேலைக்காரியாக வைத்திருக்க நினைத்த அவளின் ஆசை நிராசையாகிவிட தன் இயலாமையை காட்டமுடியாமல் ஆரிபாவின் கையில் இருந்து போனை வாங்கியவள் கரீம் சபிய்யாவுடன் பேசப் போவதாக கூறவும் சபிய்யாவை அழைத்து போனை கொடுத்தாள்.

தந்தையுடன் பேசிய சபிய்யாவின் கண்களிலிருந்து கண்ணீர் ததும்பியது. மொட்டு விரிந்து பூவாகும் போது வரும் ஆனந்த தேன் துளி விடிவு காலம் அவளை நெருங்குவது போல் ‘கட்டாகிய கரண்டும்’ மீண்டும் அவளது உள்ளத்தினைப் போல் எங்கும் ஒளி வெள்ளமாக்கியது.

# பெண்ணே நீ அழாதே!

பெண்ணே, நீ அழாதே.

ஏன் அழுகிறாய்

உன் அழுகைதான் உன் பலவீனம் அழாதே பெண்ணே!

உன் அழுகைதான் உன் தோல்வியின் முதற் படி

உன் அழுகையைப் பார்த்து பலவீனம் வீரியமடையும்

கயவெரெல்லாம் உன் அழுகைக்காக காத்திருந்து ஆனந்தம் கொள்வர்

அழாதே பெண்ணே அழாதே!



உன் கண்ணீரை முற்றுப்பெறு உன் பலவீனம் விட்டொழியும்

உன் கண்ணீரைத் துடைக்க உன் இரு கைகளும் போதும் உன் பத்து விரல்களால்

சுட்டு விரலால் மட்டும்

துடைத்துப் பார் வீரம் பொங்கும்.

இறைவன் தந்த நம்பிக்கையுடன் உன் இரு கை சேர்த்து இறை பக்தியை நாடி

உடன்பட்டு எழுந்து வா

அழாதே பெண்ணே அழாதே!

பாரதி கண்ட புதுமைப் பெண்ணாய் துணிந்தெழு கொதித்தெழு

இஸ்லாமியப் பெண்ணின் வரையறைக்குள் நின்றும் அகன்று விடாதே .

பாரினில் இவள் பெண் தானே

என்று அலட்சியம் கொள்வோரை காலில் போட்டு மிதிக்கவும் தயங்காதே உன் அறிவின் ஆற்றலாய்

இஸ்லாம் தந்த பெண்ணுரிமைச் சட்டம் சமவுரிமை என்றே மறவாதே!

அழாதே பெண்ணே நீ அழாதே

காவியம் படைக்க வந்த மங்கையர்களில் ஒருத்தி நீ இந்த தூசுகளுக்கெல்லாம் அஞ்சலாமோ?

வேண்டும் வேண்டும்.

அநியாயங்களுக்கெதிரான கோபமும் வேண்டும்

கயவர்கள் காமர்களால் உன் கற்பும் அழகும் அழிக்க நேரிடும் முன்

சினந்தெழு வீர மங்கையாக அகத்தின் அழகும் ஒரு கோபமே பெண்ணே

அழாதே பெண்ணே நீ அழாதே.

சேகு பரீகா - ஏறாவூர்- 02

# இஸ்லாமிய பெண்களும் வெட்கமும்

வெட்கம் என்பது பொதுவாக மனிதர்களிடத்தில் இருக்க வேண்டிய ஒரு அவசியமான பண்பாகும். இருந்தும் வெட்கம் பற்றி பேசும் போது பெண்களைத்தான் அதிகம் யோசிக்கின்றோம். அன்றைய கால தமிழறிஞர்கள் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்பன சிறந்த பெண்களின் பண்புகளாகும் என்று குறிப்பிட்டுள்ளனர். உண்மையில் பெண்களுக்கு தனி அழகு கொடுப்பதே அவர்களுடைய வெட்கந்தான்.

**இஸ்லாம் பெண்களுக்கு சில வரம்புகளை பேணுகின்றது. அது அவர்களின் பாதுகாப்புக்காகவேயன்றி அவர்களுக்கான கட்டுப்பாடாக அமையாது. குறிப்பாக அன்னிய ஆண்களைக் கண்டால் பார்வையை தாழ்த்த வேண்டும், அந்நிய ஆண்களுடன் நளினமாக பேசக் கூடாது, அந்நிய ஆண்களுடன் தனிமையில் இருக்கக் கூடாது, ஆடைகளில் ஒழுக்கத்தை பேண வேண்டும் என்பதாகும்**

“அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு” என்ற நிலை போய் இன்று பெண்கள் கல்வியில் முன்னேறி விண்வெளி வரை சென்று சாதித்துள்ளனர். பெண் அடிமைத்துவம் பெண் விடுதலைக்கு அப்பால் ஆண் பெண் சமத்துவம் என்ற போராட்டத்தில் தங்களுக்கான உரிமைகளை பெண்கள் அடைந்துள்ளார்கள் என்றே கூறலாம்.

அதே நேரத்தில் நாகரீக மாற்றத் திற்கும் கல்வி முன்னேற்றத்திற்கு மான தேடலில் பெண்கள் தங்களுக் குரிய இயற்கையான வெட்கத்தை தொலைத்துக் கொண்டிருக்கின்றார்கள் என்றே எண்ணத் தோன்றுகின்றது.

“நபியே மு.ஃமினான பெண்களுக்கு நீர் கூறுவீராக, அவர்கள் தங்கள் பார்வைகளை தாழ்த்திக் கொள்ளட்டும். தங்கள் அலங்காரத்தில் (சாதாரணமாக வெளியில்) தெரியக்கூடியதைத் தவிர(வேறு எதையும்) வெளிக்காட்ட வேண்டாம். மேலும் அவர்கள் தங்கள் மார்புகளை முந்தானைகளால் மறைத்துக் கொள்ளட்டும். (அலகுர்ஆன்:24:31) என்று இறைவன் திருமறையில் கூறுகின்றான்.

“கன்னிப் பெண்ணும், விதவைப் பெண்ணும் ஒப்புதல் பெறப்படாமல் திருமணம் முடிக்கப்படமாட்டாள்” என நபி (ஸல்) அவர்கள் கூறியபோது அனுமதி கேட்பது எப்படி? (அவள் வெட்கப்படுவாளே) என்று நபித்தோழர்கள் கேட்டனர். அதற்கு அவளின் வெட்கத்தால் ஏற்படும் மௌனமே அனுமதியாகும் என்று பதில் கூறினார்கள். (நூல்: புகாரி, முஸ்லிம்)

இஸ்லாம் பெண்களுக்கு சில வரம்புகளை பேணுகின்றது. அது அவர்களின் பாதுகாப்புக்காகவேயன்றி அவர்களுக்கான கட்டுப்பாடாக அமையாது. குறிப்பாக அந்நிய ஆண்களைக் கண்டால் பார்வையை தாழ்த்த வேண்டும், அந்நிய ஆண்களுடன் நளினமாக பேசக் கூடாது, அந்நிய ஆண்களுடன் தனிமையில் இருக்கக் கூடாது, ஆடைகளில் ஒழுக்கத்தை பேண வேண்டும் என்பதாகும்.

இலங்கையில் இஸ்லாமிய பெண்களை பொறுத்தவரையில் ஆரம்ப காலங்களில் இந்துக்களோடு ஒன்றுபட்டு வாழ்ந்ததனால் அவர்களின் ஆடைக்கலாசாரம் (சாரி, சல்வார்) போன்ற ஆடைகளாக இருந்தன. ஹிஜாப், நிகாப் என்ற இஸ்லாமிய ஆடை கலாச்சார நடைமுறை இருக்கவில்லை. இருந்த போதிலும் அன்றைய பெண்கள் "முக்காடு" அணிவது உயரிய ஒழுக்கத்தையும் வெட்கத்தையும் வெளிப்படுத்தியது. மருமகனுக்கு மறைந்து ஒளியும் மாமியார்களும், மச்சான்களுக்கு மறைந்து ஒளியும் மதினிகளும் வெட்கத்தை உணர்ந்தார்கள் என்பதற்கு சான்றாகும்.

ஆனால் இன்று இஸ்லாமிய கலாசாரத்தை நன்குணர்ந்து பெண்கள் ஆடை அணிந்தாலும் நாகரீக மாற்றத்தில் அந்த ஆடைகளின் ஒழுக்கம் பெண்களின் இயற்கையான வெட்கத்தை கொண்டு வருகின்றதா என்ற கேள்வி எழுகின்றது. காரணம் இன்று நாகரீக வளர்ச்சியில் பொது இடங்களிலும், கடற்கரை யோரங்களிலும் பெண்களின் ஆடை ஒழுக்கம் இஸ்லாமிய வரையறைக் குட்பட்டதா? என விமர்சனம் செய்யப்படுகின்றது.

எனவே மாற்று மத பெண்களுக்கு இஸ்லாத்தையும் முஸ்லிம் பெண்களின் கலாசாரத்தை எடுத்து இயம்புவதற்கும், எதிர்கால எமது சந்ததியினருக்கு சரியான வழகாட்டல்களை வழங்குவதற்கும் பெண்களின் ஆடைகளில் மட்டுமின்றி பண்புகளில் மாற்றங்களை கொண்டு வருவோம். தொலைந்து போன வெட்கத்தை மீட்டெடுப்போம்.

**ஏ.எல்.ஏ. முனீஸ்,**
முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர்,
பிரதேச செயலகம்,
ஏறாவூர் நகர்



# பெண்

கருவறையில் உருவானது பெண் என அறிந்து

கலைத்து விடச் சொன்ன உறவுகளும்

கையில் அவளை ஏந்தி கஷ்டம் தான் என்ற பந்தங்களும்

மாது அவளுக்கு மதி வளர்க்கும் கல்வி வேண்டாம் என்றவர்களும்

பேதை எம்மை போதையாய் கண்ட ஆண்களும்

நங்கை அவள் நானிலத்தின் அடிமை என்றவர்களும்

நடுங்கும் அளவில் வீறு கொண்டாள்.

வீரம் கொண்டெழுந்தாள்.

செங்கோட்டை முதல் செவ்வாய் வரை சென்றாள்.

கரை இல்லாக் கல்வியை கரைத்துக் குடித்தாள்.

காணாத இடமெல்லாம் கண்டு வந்தாள்.

கட்டிலுக்கு மட்டும் பெண் சொந்தமில்லை.

தொட்டில் ஆட்ட மட்டும் பிறக்கவில்லை.

சத்தம் இட்டு சொல்லவில்லை

சாட்டையால் அடித்து சொன்னாள்

சாதனைப் பெண்.



பர்சானா, ஏறாவூர்

# விடியலை நோக்கி ...

பாத்திமா ராத்தா..... பாத்திமா ராத்தா...... என அழைத்த ஓசையைக் கேட்டு வீட்டின் உள்ளே இருந்து ஷோலை எடுத்து தலையில் போட்டு சரி செய்த படி ஒரு பெண் வெளியில் வந்து என்ன பரிதா என்ன விசயம் எனக் கேட்க எங்க கடை தொறக்கலயா? மகளுக்கு ஒரு கவுண் அடிக்கணும் ராத்தா என கேட்ட படி உள்ளே நுழைந்தாள் பரிதா. அவளிடம் துணியை வாங்கி எடுத்து அவளுடன் சிறிது நேரம் கதைத்து அவளை அனுப்பி விட்டு தனது கடையை திறப்பதற்காக ஸட்டரை (Shutter) மேலே இழுத்தாள் பாத்திமா.

கடையை சுத்தம் செய்து விட்டு தனது தையல் மெசினில் உட்கார்ந்து தைத்து அரைவாசியில் இருந்த ஹபாயாவை தைத்துக் கொண்டிருந்தாள். அச்சமயம் உள்ளே இருந்து ஒரு குரல் உம்மா.... உம்மா... நாளைக்கு வாப்பாவ பார்க்க போறதானே என அக்குரல் ஒலித்தது. அதைக் கேட்ட மாத்திரத்தில் தையல் மெசின் ஓட்டம் நிறுத்தப்பட்டு பாத்திமாவின் எண்ண அலைகள் பழைய நினைவுகளுக்கு அழைத்துச் சென்றது.



அழகிய தோற்றம் கொண்ட வசீகரமான வசதியான குடும்பத்து பெண் அவள். அவளுடன் சேர்த்து அவளது பெற்றோருக்கு இரு பெண் குழந்தைகள். குடும்பத்தில் மூத்த பெண் அப்போது க.பொ.த உயர்தரப் பரீட்சைக்கு தயாராகிக் கொண்டிருந்த நேரம் தான் ஒரு வைத்தியர் ஆக வேண்டும் எனும் கனவில் உயர் தரத்தில் உயிரியல் விஞ்ஞான பிரிவை தேர்ந்தெடுத்தாள். பாடசாலையில் முதல் மதிப்பெண் எடுக்கும் பிள்ளைகள் வரிசையில் அவளும் ஒருத்தி. இந்தக் கால கட்டத்தில் அவளுக்குள்ளும் கட்டிளமைப்பருவ பிள்ளைகள் எதிர்நோக்கும் காதல் மலர்ந்த தருணம் தனது நண்பியின் அண்ணனின் நண்பன் என அறிமுக மாகிய நபரிடம் இருந்து காதல் விண்ணப்பம் அவளுக்கு கைத்தொலைபேசி வாயிலாக அவளை அந்த சவால் அடைந்தது.

ஆரம்பத்தில் தனது குடும்பம், கல்வி போன்றவற்றை யோசித்து நண்பர்களாக பழகிய நாட்கள் சென்று, குறித்த நபர் தனது வாழ்வில் இல்லையென்றால் வாழ்க்கையே வெறுமை என உணரத் தொடங்கினாள். தனது படிப்பை அவளையறியாமலேயே கைவிட்டாள். பெற்றோர்களின் தலையீட்டில் இறுதிப் பரீட்சை எழுதி முடித்தவள், தனது விருப்பத்தை தெரிவித்தாள். பெற்றோருக்கு துளியும் சம்மதமில்லை என்றாலும் வீட்டை பகைத்துகாதலனை கரம் பற்றினாள். இதன் விளைவு பெற்றோரிடம் இருந்து பிரிந்து வேறு இடத்திற்கு இடம் பெயர்ந்து, கணவனின் உறவுகளுடன் வாழ பழகிக் கொண்டாள். ஆறு ஆண்டுகள் கடந்த நிலையில் இரண்டு பிள்ளைகளுக்கு தாயும் ஆகி விட்டாள்.

கணவர் ஆடை வியாபாரம், ஊரில் சொல்லிக் கொள்ளும் அளவிற்கு வசதி படைத்தவர்கள்தான் அப்துல்லா குடும்பம். என்னதான் கணவனின் அன்பில் மகிழ்ச்சியாக இருந்தாலும், பெற்றோரின் எண்ணம் அவளை வருத்தியது. திருமணம் முடித்து ஏழாவது ஆண்டிற்குள் சந்தோசமாக அடியெடுத்து வைக்கப் போகின்றோம் என நினைத்தவள் வாழ்க்கையில் புயல் வீசப் போகின்றது என்பதை அறிந்திருக்கவில்லை. தனது கணவனது நடத்தையில் மாற்றத்தை அவதானிக்க தொடங்குகிறாள்.

வழமையில் ஒன்பது மணிக்கு முதல் கடையை அடைத்து விட்டு வரும் கணவன் இப்போதெல்லாம் இரவில் ஒரு மணி, மூன்று மணி எனவும், சில வேளைகளில் விடிந்தவுடன் வருவதையும் வாடிக்கையாக வைத்திருந்தார். கணவனிடம் இது பற்றி கேட்கும் சமயத்தில் கடையில் வேலை இருப்பதாக கூறியும் நண்பர்களை கூறியும் வெவ்வேறு காரணங்கள் கூறியும் சமாளித்துள்ளார். அது மாத்திரமன்றி அத்துடன் சரியாக கடைக்கு செல்லாமல் வீட்டில் பகல் நேரத்தில் உறங்குவதும், அவர்களது தாம்பத்திய உறவில் கணவர் தற்போது நடந்து கொள்ளும் முறை உடலியல் ரீதியில் அவளை காயப்படுத்திய சில சம்பவங்கள் ஒரு கட்டத்தில் பாத்திமாவின் சந்தேகத்தை உச்ச நிலைக்கு கொண்டு சென்றன.

ஒரு நாள் குளியலறையில் கிடைக்கப்பெற்ற வில்லைகள், ஈய கடதாசிகள் போன்றவற்றை பார்த்து அதிர்ந்து போனாள். இவ்வாறான விடயம் தொடர்பில் அவள் சமீபகாலமாக பல விழிப்புணர்வு நிகழ்வுகள் மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் சமூக வலைத்தளங்கள் மூலம் அறிந்து கொண்ட விடயங்கள் தனது வீட்டிலும் நடக்கின்றதை எண்ணி பதறிப் போனாள். தனது கணவர் போதை மாத்திரைக்கு அடிமையாகி உள்ளார் என்பதை அவளால் ஜீரணிக்க முடியாதவளாய் அவளது வாழ்வு இருண்டு விட்டதாக சிந்தை கலங்கிப்போனாள். இது தொடர்பாக மேலும் கணவரிடம் வினவும் சந்தர்ப்பத்தில் அவளுக்கு அடியும் உதையும் பரிசாக கிடைத்தன. இந்த கணவன் மனைவி சண்டைகள் அனைத்தையும் பாத்திமாவின் மூத்த மகன் அவதானித்து தனது வகுப்பா சிரியரிடம் அழுது கொண்டு கூறிய சம்பவங்களை கூற குறித்த ஆசிரியர் பாத்திமாவை அழைத்து பிள்ளையின் மனநிலை மற்றும் வகுப்பறையில் சோர்வாக இருப்பது, கற்றல் செயற்பாடுகளில் சரியாக ஈடுபாடு காட்டாமை போன்ற விடயங்களை கூறியிருந்தார். எனவே தனது பிள்ளையின் நலன் கருதி பாத்திமா இது தொடர்பில் தனது கணவனிடம் கேட்பதை நிறுத்தி விட்டாள்.

ஆனால் நாளுக்கு நாள் அவளது கணவனின் செயற்பாடுகள் மாத்திரமன்றி உடல் நலமும் மோசமாகியது. பாத்திமா உளவியல் ரீதியில் மாத்திரமன்றி உடலியல் ரீதியிலும் தனது கணவனால் கொடுமைகளை அனுபவித்தாள். இதனால் மிகவும் மன அழுத்தத்திற்கு உள்ளாகிய பாத்திமா எந்த அழகை தனது கணவர் விரும்பினாரோ அதனை இல்லாமல் செய்ய வேண்டும் என நினைத்து தனது அழகிய கூந்தலை தாறுமாறாக வெட்டி தன்னையும் காயப்படுத்திக் கொண்டாள்.

இதன் விளைவு கணவன் மனைவி பிரச்சினை தீவிரமடைந்தது. ஒரு கட்டத்தில் தனது பிள்ளைகளை அழைத்துக் கொண்டு கணவனுக்கு கூறாமல் தனது நண்பியின் வீட்டிற்கு சென்று விட்டாள். அங்கிருந்து இரண்டு நாட்களின் பின் தான் அவரை விவாகரத்து செய்யப்போவதாக குறுந்தகவல் அனுப்பினாள். இதைப் பார்த்த அப்துல்லா, தனது மனைவி பிள்ளைகளை இழந்து விடுவோம் எனும் பதட்டத்தில் அவர்கள் சொல்வதை தாம் கேட்பதாக கூறி தன்னை வைத்தியரிடம் கூட்டிப் போகும்படி கூறி தான் இனி போதை எடுக்கப் போவதில்லை தனக்கு அவர்கள் வேணும் என்பதை கூறி அவர்களை தன்னிடம் அழைக்கிறார். இதனை நம்பி அவளும் செல்கிறாள் ஒரு கிழமை தனது நடத்தையை மாற்றிக் கொண்டதாக நடிக்கிறார். அவளுடன் உளநல மருத்துவரை நாடுகிறார். அவர் கூறுவதை கேட்டு மருந்து மாத்திரைகளை உட்கொள்கிறார் அவளுடன் அன்பாக நடக்கிறார். எல்லாம் முடிந்து விட்டது என அவள் நினைக்கும் போது ஒரு இரவு நேரத்தில் அவளை ஒரு தனி அறையில் தள்ளி பூட்டி விட்டு பிள்ளைகளை அழைத்து சென்று விடுகிறார்.

மீண்டும் வந்து அவளை மிகவும் உடலியல் ரீதியாக துன்புறுத்தி காயத்தை ஏற்படுத்துகிறான். வலி தாங்க முடியாமல் மயக்கமாகிறாள். அவளை விட்டு கணவர் வெளியே சென்று விட மயக்கம் தெளிந்து எழுந்தவள் உடனடியாக பொலிஸின் உதவியை நாடி மருத்துவமனைக்கு செல்கிறாள். அங்கிருந்து தனது கணவரிடம் இருந்து பிள்ளைகளையும் காப்பாற்றி, அவரது பழக்கத்திலிருந்து மீட்பதற்காக அவசர தொலைபேசி இலக்கம் 1938 தொடர்பு கொண்டு பிரதேச செயலக உத்தியோகத்தர்களின் உதவியுடனும் பொலிஸ் மற்றும் வைத்தியரின் உதவியுடன் கணவரை புனர்வாழ்வு மையத்துக்கு அனுப்பி வைக்கிறாள். கணவனின் தீய பழக்கத்தால் வியாபார நிலைமைகளும் மோசமாகியதால் அதனை வாடகைக்கு கொடுத்து விட்டு தையல் வேலைகள் மூலமும் வருமானம் ஈட்டி வருகிறாள். இதனை யோசித்துக் கொண்டு இருக்கும் போது ஒரு பிஞ்சுக் கரம் அவளைப் பற்றி ‘‘உம்மா பசிக்குது’’ என்ற சத்தம் கேட்க சுய நினைவுக்கு வருகிறாள். பக்கத்தில் இளையமகள் நின்று கொண்டிருந்தாள்.

முற்றும்

**திருமதி. றொசானா உதயச்சந்திரன்**
**உளவளத்துணை உத்தியோகத்தர்**
**பிரதேச செயலகம், ஏறாவூர் நகர்**

# பெண் ஒரு வரம்



பெண் ஒரு தியாகி
தன்னைச் சார்ந்தவர்களுக்காய்
அனைத்தையும் தியாகம் செய்பவள்.

பெண் என்பவள் பொறுமை
தன்னகத்தவர்களுக்காய் அனைத்தையும்
தாங்கிக் கொள்பவள்.

பெண் ஒரு வரம்
பெருமை மிகு தாய்மையை
பெற்ற பெரும் பேறு.

பெண் ஒரு தாதி
தன் உறவுகளுக்காய்
தினமும் சேவகம் செய்பவள்.

பெண் ஒரு வேலைக்காரி
குடும்பத்தாரின் வேலைகளைத்
திறம்படச் செய்து முடிப்பவள்.

பெண் ஒரு புதுமை
அனைத்தையும் தனக்குள்ளே அடக்கி
புன்னகை செய்பவள்.

பெண் ஒரு அரசி
தன் அன்பால் அனைவரையும்
கட்டி ஆள்பவள்.

பெண் ஒரு பூஞ்சோலை
தன்னைத் தினம் தினம்
புதிதாய் புஷ்பிப்பவள்.

பெண் ஒரு காந்தம்
தன் அன்பால் அனைவரையும்
ஈர்த்துக் கொள்பவள்.

பெண் ஒரு வலிமை
அனைத்து வலிகளையும்
தாங்கும் மகாசக்தி.

பெண் ஒரு கரு
கவிஞர்களின் கற்பனைக்கு
பொருத்தமான உரு.

பெண் ஒரு சுமைதாங்கி
உறவுகளின் இன்ப துன்பங்களை
சுமந்து நிற்பவள்.

பெண் ஒரு புத்தன்
தன்னை தாக்குபவர்களுக்கும்
அன்புக்கரம் கொடுப்பவள்.

பெண் ஓர் அன்பு
கடின உள்ளத்தையும் அரவணைக்கும்
அருமையான ஆயுதம்.

பெண் ஒரு புயல், தென்றல்
அன்பால் ஆளும்போதும்
அடக்கி வைக்கும் போதும்
விம்பமாய்ப் பிரதிபலிப்பாள்.

பெண் ஒரு சொர்க்கம், நரகம்
அவள் ஆக்கவும் அழிக்கவும்
சக்தி கொண்டவள்.

பெண் இன்னும் எழுதி
முடிக்கப்படாத கவிதை
அவளொரு தொடர்கதை
முடிவற்ற முடிவிலி....

**என்.எம். ஆரிபா**

**(ஆசிரியை)**



# பெண்கள் தொழில் தேடி வெளிநாடு செல்வதால் ஏ ற்படும் விளைவுகள்

இலங்கையில் தொழிலாளர் புலம்பெயர்தல் ஒரு தொடர்ச்சியான தொழிலுக்கான ஆதாரமாக விளங்குகின்றது. இது நாட்டில் வேலை இல்லாப்பிரச்சினையை குறைப்பதில் முக்கிய பங்களிப்பை செய்வதுடன் அவர்கள் அனுப்பும் பணம் இலங்கைப் பொருளாதாரத்தினை வலுப்படுத்துவதுடன் சொந்த வாழ்வாதாரத்தையும் முன்னேற்றுவதில் சிறந்த பங்களிப்பினை செய்கின்றது. ஆயினும் பெண் தொழிலாளர் புலம்பெயர்வானது நன்மையானதும் தீமையானதுமாக இருவிதமான தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளது. வெளிநாடுகளில் தொழில் புரியும் தொழிலாளர்கள் அவர்களுக்கான பாதுகாப்பு குறைபாடுகள், நலன்புரி போன்ற பல பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர்.

இன்று மத்திய கிழக்கு நாடுகளில் சுமார் 7 இலட்சம் இலங்கை பெண்கள் வீட்டு பணிப்பெண்களாக பணிபுரிகின்றனர். அவர்களில் குறிப்பாக 18 வயதிற்கும் 30 வயதிற்கும் இடைப்பட்டவர்களின் தொகையே அதிகமாக காணப்படுகின்றது. வறுமையும் குறைந்த வருமானமும் உள்ளதாக காணப்படும் குடும்பத்தில் உள்ள பெண்கள் குடும்ப பொருளாதாரத்தினை பொறுப்பேற்க வேண்டிய தேவையில் அவர்களிற்கான தொழில்வாய்ப்பாக வெளிநாட்டில் தேடும் போது அதற்கு வழங்கப்படும் முற்பணமும் அவர்களை ஊக்குவிப்பதாக அமைகிறது. அவ்வாறான நிலைமையின் போது பெண்கள் பல்வேறுபட்ட சிக்கல்களுக்கும் சவால்களுக்கும் முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

வேலைக்காக செல்லுமிடத்தில் எதிர்கொள்ள வேண்டி இருக்கும் பிரச்சினைகள் ஒருபுறம் பணி நிமித்தம் பிற நாடுகளுக்கு தனியே புறப்படும் பெண் குறித்த சமுதாய கண்ணோட்ட பிரச்சினைகள் மறுபுறம் இவற்றை தாண்டி குடும்ப தலைவியான பெண் குடும்பத்தை நீங்கி செல்லும் போது அவருடைய பிள்ளைகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் என பல்வேறு கோணங்களில் இவற்றை அணுக வேண்டியுள்ளது. சில நேரடியானதும் எதிர்மறையானதுமான தாக்கங்கள் கீழே தரப்பட்டுள்ளன. சாதக பாதகங்களாக வெளிநாட்டு நாணயமாற்று வருவாய் அதிகரிப்பு மறுபுறம் குடும்ப சிதைவு, குடும்ப வருமானம் அதிகரிப்பு குடும்ப அங்கீகார இழப்பு, சேமிப்பும் முதலீடும் அதிகரித்தல் பிள்ளைகள் புறக்கணிக்கப்படல். தொழில் அபிவிருத்தி பிள்ளைகளின் நடத்தையில் ஏற்படும் பிறழ்வுகள் குடும்ப உறுப்பினர்களுக்கான நல்ல கல்வி வாழ்க்கை தர முன்னேற்றம், பணியிடங்களில் துன்புறுத்தப்படல் ஆகியவற்றை குறிப்பிடலாம்.

புலம்பெயர்வு தொடர்பாக தூண்டும் காரணிகளாக வறுமை, சிறந்த வாழ்க்கை தர எதிர்பார்ப்பு, வேலையின்மை, சிறந்த தொழில் வாய்ப்பு, படுகடன், சேமிப்பு மற்றும் முதலீடு, பிள்ளைகளின் கல்விச் செலவு, திறன் மேம்பாடு, வீட்டு வசதி, சீதனம் அங்கீகாரம், பொருளாதார தேவைகள் பிள்ளைகளுக்கான சிறந்த எதிர்காலம் போன்றன காணப்படுகின்றன.

**சம்பவக் கற்கை:** அம்னா எனும் 15 வயது பிள்ளை பாடசாலை நாட்களில் அடிக்கடி விடுமுறை எடுப்பதும் பின் தனது வீட்டு பொருளாதார நிலை காரணமாக வீட்டு பணிப்பெண்ணாக வெளிநாடு சென்ற தனது தாயை நினைத்து அடிக்கடி மன உளைச்சலுக்குள்ளாகி சீரான நித்திரை இன்றி ஒரு வித உள பாதிப்புக் குள்ளானாள். தந்தையின் பொறுப்பற்ற தன்மை, பெண் பிள்ளைக்கான வீடு ஒன்றை அமைத்துக் கொள்ளும் நோக்கிலே அம்னாவின் தாய் தனது கணவன் மற்றும் அவரது தாயின் பராமரிப்பில் அம்னாவை விட்டு பிரதேச செயலகத்தின் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரிவின் ஊடாக முறையான புலம்பெயர்வை மேற்கொண்டு இருந்தார். தாய் வெளிநாடு சென்றதன் பிற்பாடு தனது வகுப்பு தோழிகளால் பகிடிக்குள்ளாக்கப்பட்டும் வீட்டில் தனிமையையும் உணர்ந்த அம்னா திடீரென ஒரு நாள் தற்கொலை முயற்சிகுள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின் சிகிச்சைக்கு பின்னர் உளநல பிரிவினால் கண்காணிக்கப்பட்டாள். பின் பிரதேச செயலக வெளிநாட்டு வேவைாய்ப்பு அபிவிருத்தி உத்தியோகத்தரின் கண்காணிப்பின் போது தனது தாயை வெளிநாட்டில் இருந்து மீள வரவழைத்து தருமாறு கோரினாள். அம்னாவின் கோரிக்கைக்கு அமைய 3 மாதங்களின் பின் அம்னாவின் தாயார் வெளிநாட்டில் இருந்து திரும்பி வந்தார்.

மேற்படி சம்பவக் கற்கையை நோக்கும் போது வெளிநாடு சென்ற பெண் தனது மகளின் எதிர்கால நலனை மாத்திரம் கருத்திற் கொண்டே தனது புலம்பெயர்வு பயணத்தை மேற்கொண்டு இருந்தார். இருப்பினும் தனது நோக்கம் நிறைவேறும் முன்பே பிள்ளையின் உடல், உள நலன் கருதி மீண்டும் நாட்டுக்கு வந்தார். எந்தவித வேலையும் வாழ்க்கையை நடத்துவதற்காக சம்பாதிப்பதற்கான மிகக் குறைவான வாய்ப்புக்களே இலங்கையில் உள்ள நிலையிலேயே தான் பெண்கள் பிற நாடுகளை நாடுகின்றனர். உள்நாட்டிலே அவர்களுக்கான போதிய வருமானம் ஊக்கப்படுத்தல்கள் மற்றும் சமூக வலுவூட்டும் செயற்பாடுகள், பெண்களுடைய சுய பொருளாதார முயற்சி, கல்வியறிவை பெற்றுக் கொள்ளல் போன்றவற்றில் பெண்கள் முன்வருதல் இன்றியமையாத விடயமாகும்.

பொதுவாக நம் நாட்டில் இருந்து வெளிநாடு சென்ற பெண்களுக்கு மனித மற்றும் உரிமை மீறுதல் கடத்தல் தொடர்பானவற்றிக்கு சட்ட ரீதியான நடவடிக்கை எடுத்தல் அவசியமாகின்றது. இதற்காக இயங்கும் அமைப்புக்கள் தொடர்பான அறிவூட்டல் அவசியமாகின்றது. பாதிக்கப்பட்டால் எங்கு முறைப்பாடு செய்வது, பாதிப்பு தொடர்பான மானியங்களை எங்கு பெற்றுக் கொள்ளலாம். மற்றும் வெளிநாட்டு தூதுவராலயங்களை அணுகுதல் போன்ற விழிப்புணர்வுகளை பெற்று வெளிநாடு செல்லும் போது அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் ஓரளவிற்கேனும் சமாளிக்கும் திறனை பெறுவர்.

**திருமதி. அ.க.பாத்திமா பஸ்மின்**
வெளிநாட்டு வேலைவாய்ப்பு அபிவிருத்தி உத்தியோகத்தர்
பிரதேச செயலகம், ஏறாவூர் நகரம்.



# சுமை தாங்கி

*அன்புக்கு உதாரணமாய் - அகிலத்தோர் புகழ்ந்தேற்றும்*
*அன்னைக்கு நிகரேது - அவளுக்கு இணையேது.*
*தனதாசைக் கனவுகளைத் - தனக்குள்ளே புதைத்துவிட்டு*
*மற்றவர்க்காய் வாழுகின்ற - மாபெரிய சுமைதாங்கி*

*மண்ணுலகில் தான் பிறந்து - மண்ணுக்குள் செல்லும்வரை*
*எண்ணறிய சோதனைகள் - எத்தனையோ வேதனைகள்*
*தாங்கி அனுபவித்துத் - தன் குடும்ப மேன்மைக்காய்*
*சளைக்காமல் உழைக்கின்ற - சாயாத ஆலமரம் தாய்*

*உன்னதமாம் தாய்க் குலத்தை – உயர்வுறவே மதிக்காத*
*மனித உருக்கொண்ட - மாகொடிய விலங்குகளால்*
*பெண்குலத்துக்கெத்தனையோ - பேரிடர்கள் நாள்தோறும்*
*காமவெறியர்களால் - கசக்கியெறிகின்ற*

*பிஞ்சு இளந்தளிர்கள் - பல பிணமாகிப் போகிறதே*
*வறுமையினால் வெளிநாட்டில் - வகையறியாத்துயர் சுமந்து*
*உயிரிழந்த கதைகள் பல - உலகமெல்லாம் தானறியும்*
*பெண்மைக்கு சமத்துவமாம் - பேச்சினிலே மட்டும்.*

*சட்டங்கள் பல அமைத்துச் - சரிநிகரென்றெழுதி வைத்தும்*
*அவலங்கள் கணம்தோறும் - அரங்கேற்றமாகிறதே.*
*சாதனைகள் பல செய்து - சரித்திரத்தில் இடம்பிடித்த*
*மாண்பான பெண்குலமோ – மாபெரிய துயர் நெருப்பில்.*


*வாடிக்கருகி உயிர் - வதைபடுதல் காண்கின்றோம்*
*வெளியுலகமறியாத - வேதனைகள் பலகோடி*
*தலைவிதிதானென்று - தனைநொந்து மனம் வெம்பி*
*தாங்கி கிடந்துழன்று - தன்குடும்பம் காக்கின்றாள்.*

*மகளிர்தின மெத்தனையோ - மானிலத்தில் வந்தாலும்*
*கதியற்ற கன்னியர்க்குக் - கைகொடுக்க யாருமில்லை*
*தாய்மையெனும் வரம்பெற்றுத் - தனிக்கருணையுருவான்*
*பெண்குலத்தின் துயர்போக்கிப் - பேரருளே செய் இறைவா.*

***கலாபூசணம், ஏறூர்க்கவிக்கோ, ஏ.சீ.அப்துல் றகுமான்***

# பெண்ணாக பிறந்த பொக்கிசம் பெண்

மனிதன் என்ற
மானிடத்தின்
உன்னதோர் உதயம்
பெண் என்பவள்
பத்துமாதம்
கருவாய் சுமந்து
தன் சிசுவை
தன் வாழ்வில்
முழுமதியாக மனதில்
காத்து
குவலயத்தின் பொக்கிசமாய்
உற்ற துணையின்
நற்பேறாய்
இவ் அவனியின்
அரு மருந்தாய்
பார் போற்றும்
தேசத்தின் பாவையாய்
பெண்ணே நீ
ஆல விருட்சத்தின்
ஆணிவேராய்
நிழல் தருவாய்
என்றென்றும்.



பெண்ணின் பெருமை பேச, எழுதிட எழுத்துக்கள் கரை காணப்போவதில்லை மானிடத்தின் இறை படைப்பில் உன்னதமான பொக்கிசம்தான் பெண் என்பவள். குவலயத்தின் குலவிளக்கு தேசத்தின் ஒளிப்பிழம்பு அவள். மங்கையராக பிறப்பதற்கு மாதவம் செய்ய வேண்டும் என்றார் பாரதியார்.

பல்வேறு ஆய்வுகளின் அடிப்படையில் அறிவியல் ரீதியாக பெண்களிடம் இருக்கும் சிறப்பான விடயங்களை பட்டியலிடலாம்.

அவாகள் கல்விக்கு அதிபதியாய் திகழ்கிறார்கள். எந்தவொரு தேர்வை எடுத்துக்கொண்டாலும் பெரும்பாலும் முதலிடத்தை பிடிப்பவர்கள் மாணவிகள் மட்டுமல்ல அதிசிறந்த பெறுபேறு ஆகக்கூடிய வீதம் வெற்றியின் முன்னேற்றமும் மாணவிகளை சார்ந்தே காணப்படுகின்றது.

ஒரு மனிதனின் சராசரி வாழ்க்கையில் ஆணின் பொருளாதாரத்தில் கணிசமான பங்களிப்பு செய்பவரும் பெண்ணாக இருக்கின்றார். எமது தேசத்தின் சிறந்த அரச கட்டமைப்பின் நிர்வாகிகளாக பெண்கள் தலைசிறந்து காணப்படுகிறார்கள் என்பதில் ஐயமே இல்லை. ஆசிரியராய், ஆலோசகராய், இலிகிதராய், சாரதியாய், தாதியாய், மாலுமியாய் இன்னும் பல பதவிப் பெயர்களுடன் பெண் என்பவள் குடும்பத்தின் முன்னேற்றத்திற்கான ஏணியாய் உழைத்து வருகிறாள்.

தன்னம்பிக்கையின் வடிவம் பெண். பெண்களை இறைவன் உடலளவில் மென்மையாக படைத்திருந்தாலும் மனதளவில் பெண்கள் மிகவும் வலிமையான வர்கள். ஏன் என்றால் அத்தனை துன்பங்களையும் சகித்துக் கொண்டு குடும்பத்துக்காய், சமூகத்துக்காய், தேசத்துக்காய் போராடக் கூடியவள். தன் துன்பங்களை துச்சமென கருதி முழுவதும் தன்னம்பிக்கையோடு உழைப்பவள் தன் கணவனுக்காய் குழந்தைகளுக்காய் தன் வாழ்வை அர்ப்பணிப்பவள்.

அன்பின் இலக்கணம் பெண் என்பவள் தன்னை தூற்றுபவர்களையும் மன்னித்து அன்போடும், அரவணைப்புடனும் வாழ்வின் இன்னல்களை களைந்து அனைவரையும் நல்வழிக்கு இட்டுச் செல்பவள் பெண் தாயாக, சகோதரியாக நன்நோக்கத்துடனும் உளத்தூய்மையுடனும் பழக கூடியவர்கள் பெண்கள்.

பெண் என்றும் உன்னதம். இறைவனின் படைப்பில் உன்னதமானதோர் இயல்பு பெண்ணுக்கு உண்டு. தாய்மை எனும் சிறப்பு இந்த உலகத்தில் வந்து பிறக்கின்ற ஒவ்வொரு மனித உயிர்களும் பெண் என்ற தியாகத்தினால்தான் உருவாகின்றது. இல்லாவிட்டால் இந்த உலகில் உயிர்களே இருக்காது மனிதர்கள் மட்டுமன்றி விலங்குகள் பறவைகள் என்று அனைத்து ஜீவராசிகளுக்கும் பெண் என்கின்ற அந்த வடிவம் தாயாக அனைவரையும் அரவணைக்கின்றது.

எழுத்தாளர்கள், இசையரசிகள், தலைவர்கள், ஆராய்ச்சியாளர்கள், கண்டுபிடிப்பாளர் கள் எனப் பல்வேறு துறைகளிலும் பெண்கள் கொடி கட்டிப் பறக்கின்றனர். நாட்டிற்கும் வீட்டிற்கும் பெருமையே பெண்களால் எதையும் சாதிக்க முடியும் என்று சாதிப்பதோடு வீட்டின் நிர்வாகத்திற்கு ஆண் தலைவராக இருந்தாலும் பிரச்சினைகளின் தீர்வுகள் சொல்லவும் பக்கபலமாய் இருப்பதும் பெண்களே என்பதில் சந்தேகமில்லை.

புராண காலத்திலிருந்தே பெண்கள் போற்றப்பட்டு பாராட்டுக்களைப் பெற்றவர்கள். ஆரம்ப கால இஸ்லாமிய வரலாற்றில் பெண்கள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவர்களாக காணப்படுகின்றனர். ஒரு வணிகத்துறையின் தலைவியாக கதீஜா (ரழி) வாழ்ந்து காட்டியுள்ளார்கள். இஸ்லாத்துக்காக உயிர் நீத்த முதல் பெண் ஸுமையா (ரழி) அவர்கள். போராட்டங்களிலும், வர்த்தகத்திலும், கிலாபத் ஆட்சியிலும், ஹதீஸ் துறையிலும் முக்கிய வகிபாகம் ஸஹாபி பெண்களுக்கு உண்டு என்பது தெட்டத்தெளிவு.

பெண் என்பவள் போற்றப்பட வேணடியவள். இங்கே இந்த சமூகத்தில் வாழ்கின்ற ஒவ்வொருவரும் பெண்ணையும் போற்றி வாழ்ந்த ஒரு சமூகத்தின் வழி வந்தவர்கள் பெண்ணியத்தை மதிப்பவர்களாகவும் அடுப்பூதுபவர்களாய் மட்டுமன்றி அவளுக்கொரு நல் மனதும், நல்லொழுக்கமும், நல்ல நோக்கமும், சிந்தனையும் கொண்டவர்களாய் இருப்பாள் என்பதை பெண் அல்லாதவர்கள் உணர வேண்டும். பெண் தேசத்தின் பெருமைக்குரியவள் மட்டுமல்ல இவ் அவணியின் அரு மருந்தாகவும் பொக்கிசமாகவும் போற்றப்பட வேண்டியவர்கள் பாதுகாக்கப்பட வேண்டியவர்கள்.

**சீனி முஹம்மது சுலைஹா**
தொழிநுட்ப, மனிதவள அபிவிருத்தி உத்தியோகத்தர்

# பெண் கல்வி

துன்பங்கள் தொடராய்த் துரத்த
தடைகள் பயணத்தை நிறுத்த
வீண்பழிகள் விண்ணளவு வீசப்பட
வித்தியாசமான பார்வையில் அவள் நோக்கப்பட...

பல்கலைக்கழகம் சென்றதால்
ஒழுக்கமற்ற  மாதுபோல்
அடக்கமற்ற ஆண் போன்றவள் என
வார்த்தைகளால் வர்ணிக்கப்பட....



நச்சரிக்கும் திருமணப்பேச்சுக்கள்
எச்சரிக்கையாய் சிலபல கூற்றுக்கள்
எரிச்சலூட்டும் எதிர்ப்புக்கள்
எதிர்பாரா பிரச்சினைகள், வலிகள்
என அத்தனை சுமைகளையும் தாங்கி

படிப்பு பட்டம் எல்லாம்
பெண்ணிற்கெதற்கு என்றாகிய சமூகத்தில்
உயர் பதவி பெறும் வரையில்
அவள் போராடிக் கொண்டிருக்கிறாள்

பொன்னை விட பெறுமதியான
பெண் கல்வியை உயர் ஆயுதமாய் ஏந்தி...
இலட்சிய வேட்கையுடன்
இலக்கு நோக்கிய  பயணத்தில்

வையகத்தில் மாற்றங்கள்
பெண் கல்வியின் ஏற்றமே
என உரைத்த நாவுகள் ஊமையானதா அன்றி

பெண்ணியம் பேசிட்ட
பேனாக்களில் மை தீர்ந்ததா?
என்ற சந்தேக வினாக்களுக்கு
விடை தேடிய வண்ணமே
அவள் பயணமும் தொடர்கிறது....

நுஸ்ஹா நுவாஸ்
ஏறாவூர்



# வாழ்வின் புதிரானவள் பெண்

வண்ணங்களில் இல்லை வாழ்க்கை, எண்ணங்களில் தான் உள்ளது என எடுத்தியம்ப எங்கு ஏராளமாய் உள்ளன அத்தாட்சிகள். பாட்டி காலம் தொட்டு விண்ணில் கால் பதித்த கல்பனா சௌலா வரை நின்று விடவில்லை பெண்ணின் சாதனைகள் ஆச்சரியங்கள். படைக்கும் புதுமையாய் உருவானவள் பெண் திறமைகளையும் புதுமைகளையும் வான் பரப்பில் உலாவரும் வீர மங்கை யானவள் விமானங்களிலும் விண்ணைத் தொட்டு மண்ணுக்கு பெருமை சேர்க்கும் பெண்ணவளின் துணிவு அகப்பை பிடித்து அரிசி புடைத்து அடுப்பங்கரையில் ஆக்கி அவித்து விட்டதோடு நின்றுவிடாமல் அத்தனை வேலைகளையும் செய்து முடித்து கொஞ்சமும் சளைக்காமல் முக்காடு அவிழ்ந்து முந்தானை கலைந்து முகம் சிவந்து ஸ்பரிசங்கள் காணும் இரவு நிலா அவள். மாறா அதே விடியலில் நின்று தொடரும் தன் பணியினை இடை விடா மூச்சுடன் சுற்றும் இராட்டினம் அவள்.

பெண்களை இழிவுபடுத்தும் எந்த ஒரு நாடும் உயர்வு பெற்றதில்லை இதனைத் தான் ‘‘மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையை கொளுத்துவோம் வையவாழ்வு தன்னில் எந்த வகையிலும் நமக்குள்ளே தாதர் என்ற நிலைமை மாறி ஆண்களோடு பெண்களும் சரி நிகர் சமமாக வாழ்வோம் இந்த நாட்டிலேயே’’ என்று விடுதலைப் பாட்டில் பெண்களின் நிலை பற்றி பாடியுள்ளார் பாரதியார். பெண்கள் முன்னேற்றத்திற்கு பாரதியார் கூறும் உபாய வழிகள் ஒன்றுதான் கல்வியை தவிர வேறு எந்த விதமான உபாயமும் பயன்பெறாது என்றார. ஓர் ஆணை படிக்க வைத்தால் அவன் மட்டுமே முன்னேறுவான். ஒரு பெண்ணை படிக்க வைத்தால் அந்த குடும்பமே முன்னேறும் என்றார்.

‘‘மங்கையாய் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டும் என்று தேசிய விநாயகம் பிள்ளையின் பாடல் இச்சமூகத்திற்கு ஓர் எடுத்துக்காட்டு. ‘‘கைத்தொழில் ஒன்றை கற்றுக்கொள் கவலை உனக்கில்லை ஒத்துக்கொள் எத்தொழில் எதுவும் தெரியாமல் இருந்திடல் உனக்கே சரியாகுமோ’’ என நாமக்கல் கவிஞர் ராமலிங்கம் பிள்ளையின் பாடல் உள்ளது. இன்றுவரை எல்லா கவிஞர்களும் புலவர்களும்

கட்டுரை ஆசிரியர்களும் அறிஞர்களும் பெண்களைப் போற்றி பெண்மையை புகழ்ந்துபாடி கவிகளையும் கட்டுரைகளையும் எழுதியுள்ளார்கள்.

இஸ்லாத்தில் கூட பெண்களை மென்மையாக நடத்துங்கள் அவர்களை நோவினை செய்யாதீர்கள் மற்றும் அவர்களை கண்ணியப்படுத்துங்கள் என பல ஹதீஸ்களில் நபியவர்கள் வலியுறுத்தியுள்ளார்கள். அல்லாஹ் கூறுகிறான்: மனைவியர் மீது கணவர்களுக்கு உள்ள உரிமைகளைப் போலவே கணவர்கள் மீது மனைவியருக்கும் உரிமையுண்டு (2:228), அவளிடம் அழகிய முறையில் நடந்து கொள்ள வேண்டும். அல்லாஹ் கூறுகிறான்: அவர்களோடு நல்லமுறையில் வாழ்க்கை நடத்துங்கள்.(4:119)

ஏனெனில் நபி (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்: தம் மனைவியரிடத்தில் சிறந்தவரே உங்களில் சிறந்தவர். நான் எனது மனைவியரிடத்தில் சிறந்தவராக இருக்கின்றேன்.(திர்மிதி), மேலும் கூறினார்கள்: பெண்களைக் கண்ணியமாக நடத்துபவர்களே நல்லவர்கள். அவர்களை இழிவாக நடத்துபவர்கள் தாம் கெட்டவர்கள். அது மட்டுமல்லாது பெண்ணுக்கென்று சூரத்துன் நிஸா மற்றும் மரியம் போன்ற அல்குர்ஆன் வசனங்களும் இடம் பெற்றிருக்கின்றன.

**இஸ்லாத்தில் கூட பெண்களை மென்மையாக நடத்துங்கள். அவர்களை நோவினை செய்யாதீர்கள் மற்றும் அவர்களை கண்ணியப் படுத்துங்கள் என பல ஹதீஸ்களில் நபியவர்கள் வலியுறுத்தியுள்ளார்கள். அல்லாஹ் கூறுகிறான்: மனைவியர் மீது கணவர்களுக்கு உள்ள உரிமைகளைப் போலவே கணவர்கள் மீது மனைவியருக்கும் உரிமையுண்டு (அல்குர்ஆன் 2 :228)**

மேலும் பெண்கள் சகலவற்றிலும் மார்க்க விழுமியங்களை கடைபிடித்து பண்பாடுகளுக்கு அமைய முன்னேற்றம் அடைய இஸ்லாம் ஒருபோதும் தடை விதிக்கவில்லை. எனவேதான் வாழ்வின் புதிரானவளாய் பெண் திகழ்கின்றாள். பெண்கள் அன்று இருந்த நிலைக்கும் தற்போதுள்ள நிலைக்கும் பல ஆரோக்கியமான மாற்றம் நிகழ்ந்துள்ளதை மறுக்க முடியாது பெண்கள் நாட்டின் கண்கள் என்று பெண்களை பெற்றவர்கள் பெண்களை கண்ணும் கருத்துமாய் வளர்க்க வேண்டும்.

இன்று படித்த பெண்கள் சமுதாயத்தில் தலை நிமிர்ந்து வாழ்கின்றார்கள் பட்டம் பெற்று சட்டங்கள் கற்று பாரினில் படித்தவர் மட்டும் உயர்வு பெற்று எல்லா துறைகளிலும் இன்று பெண்களின் குரல் ஒலித்துக் கொண்டே இருக்கின்றது. அகிலம் பாராட்டும் அற்புதங்களை ஆராய்ச்சியில் மட்டுமல்ல அரசாட்சியிலும் கண்டு விட்டாள் பெண். ஓயாமல் பல துறைகளில் பட்டம் பெற்று பாராட்டுகளைப் பெற்று சாமானியப் பெண்ணாக சிகரம் தொடும் தேன் சிட்டு தென்றலாய் புயலாய் விண்மேகமாய், மீண்டும் வளரும் பௌர்ணமி அவள்... வாழ்வில் பெண்ணாக மட்டும் அல்ல தாயாக சேயாக, தோழியாக, காதலியாக அனைத்து பரிணாமங்களையும் கொண்ட அவளுக்காய் ஒரு தினம் மகளிர் தினமாய் கிடைத்தது அவளது வெற்றி.

அவளுக்கென்று ஒரு தினத்தில் அவள் பற்றிய கற்பனையில் நானும் பெண்ணாக பிறந்தேன் என்பதில் பெருமை அடைகிறேன்.

**அலியார் செய்தூன்,**
**அபிவிருத்தி உத்தியோகத்தர்**

# மகளிர் எனும் மாணிக்கம்.

மகளிர் மண்ணின்
மாணிக்கமாம் - அவரை
இகழீர் யாரும்
மண்ணிடத்தே.

மகவைச் சுமந்து
மனுக் காத்து
மனதால் பொறுத்து
குலம் சேர்த்து
அகவை முழுதும்
அர்ப்பணித்து
அகலாப் பணிகள்
உலகத்திற்கு,

பின்னர் தூங்கி
முன்னெழுவார்
பின்னல் வந்தால்
தான் அழுவார்,
கண்ணில் வைத்துக்
காத்திடுவார்
கணவர் வெற்றியில்
பூத்திடுவார்.

தாய் , தந்தை உறவும்
தன்குடும்பம்
தராசின் இரண்டு
தட்டெனவே,

நேர் கொண்ட சிந்தை
நிலை நிறுத்தி
பார்க்கின்ற பாசத்தின்
வித்தாவார்.

பூமித்தாய் எனப்
போற்றிடவே
காமித்தார் நல்ல பொறுமையினை,
தாய் நாடென்று
வாழ்த்திடவே
தகைமை கொண்டார்
ஏட்டினிலே.



கல்வி கலையில்
உயர்வாகி
சொல்லில் செயலில்
நிகராகி
முள்ளில் படர்ந்த
வாழ்க்கையினை
முட்டி மோதி
வெல்கின்றார்.

மகளிர் மண்ணின்
மாணிக்கமாம் - அவரை
இகழீர் யாரும்
மண்ணிடத்தே.

**கவிஞர் ஏரூர் கே. நௌஷாத்**



# சுபீட்சகரமான குழந்தை வளர்ப்பில் பெற்றோரின் பங்கு

ஆரோக்கியமான குழந்தை வளர்ச்சிக்கு பௌதீக விடயங்கள் மட்டும் போதாது அவற்றுடன் உளவளர்ச்சி மற்றும் மனஎழுச்சித் தேவைகள் என்பன ஒரு குழந்தையின் வளர்ச்சியில் முக்கியத்துவம் வாய்ந்தவையாக காணப்படுவதனை பெற்றோர்கள் கருத்தில் கொள்ள வேண்டிய தேவையுள்ளது. குழந்தை வளர்ச்சியின்போது அவர்களுக்கு அன்பும் பாசமும் அரவணைப்பும் கிடைக்காதிருப்பது அவர்களின் உடல் வளர்ச்சியில் மோசமான பாதிப்புக்களை ஏற்படுத்தும் என்பது பல ஆய்வுகளிலிருந்து தெரிய வந்த உண்மையாகும்.

இதுபோன்று குழந்தைகளின் மனவெழுச்சி தேவைகள் நிறைவேற்றப்படு வதற்கும் அவர்களின் உடல் வளர்ச்சிக்கும் இடையே நெருங்கிய தொடர்பு உண்டு என்பதை அறிந்து கொள்ள வேண்டியது பெற்றோரின் கடமைகளில் ஒன்றாக உள்ளது. ஒரு குழந்தை தனது முதல் இரண்டு வருடங்களின் போது தொடர்ந்து ஆறு மாதங்கள் தன் தாயை விட்டுப் பிரிந்து வாழ்ந்தால் அக்குழந்தைகள் தங்களது எதிர்காலத்தில் இளவயதுக் குற்றவாளிகளின் பட்டியலில் பிரதான இடத்தை வகிக்கின்றமை ‘‘யோன் பொல்ப்’’ என்ற உள வளர்ச்சி நிபுணர் மேற்கொண்ட ஆய்வின் போது அறிய வந்துள்ளது. இது தாய்மார்கள் தங்களது குழந்தை வளர்ப்பின்போது கருத்தில் கொள்ள வேண்டிய ஒரு விடயமாக உள்ளது.

குழந்தைகளுக்கு ஆரம்ப இரண்டு வருடங்களின்போது குழந்தைக்கு தாயின் ஸ்பரிசம் மிக அவசியமாகும். குழந்தைகளுக்கு இரண்டு வயதாகும் வரை தாய்ப்பால் புகட்ட வேண்டும் என்ற கருத்து இதனையே சாரும். தாய்ப்பால் அருந்துவதில் தடைகளைச் சந்திக்கும் பிள்ளைகள் பின்னர் நகம் கடித்தல், பென்சிலைச்சப்புதல், சிகரட் புகைத்தல், வெற்றிலை சப்புதல் போன்ற பழக்கங் களுக்கு உள்ளாகுவர் எனும் உளப்பகுப்பாய்வின் தந்தையான ‘‘சிக்மன் வ்பிறைட்’’ இன் கருத்தினை தாய்மார் அறிந்திருக்க வேண்டியது அவசியம்.

“ஓகினாவா” என்ற தீவில் வாழ்கின்றவர்களிடையே மன நோயாளிகள் அறவே இல்லை என்பது ஆய்வொன்றின் போது தெரியவந்துள்ளது. அது மட்டுமன்றி வலிப்பு, தலைவலி, மயங்கி வீழ்தல், பீனிசம் போன்ற நோய்களும் அங்கு இல்லை இதற்கு காரணம் அத்தீவில் பிள்ளை வளர்க்கும் விதமே ஆகும். அதாவது அத்தீவில் உள்ளவர்கள் எல்லோரும் எல்லாப்பிள்ளைகள் மீதும் தங்கள் குழந்தைகள்போல் அன்பு செலுத்தி எவ்விதமான கட்டுப்பாடுகளும் இல்லாமல் சுதந்திரமாக வளர்க்கும் சூழ்நிலையே இதற்கான காரணமாகும். மேலும் அங்கு தாய்மார்கள் தமது குழந்தைகளை முதுகில் சுமந்த படியே காரியங்களில் ஈடுபடுவது அங்கு காணத்தக்க ஒரு காட்சியாகும். ஒரு குழந்தைக்கு தன் தாயின் அரவணைப்பும் ஸ்பரிசமும் கண்காணிப்பும் குழந்தையின் நிரந்தரத் தேவைகளாகும். ஒரு குழந்தை விடயத்தில் உணவு, மருந்து, ஏனைய தேவைகள் நிறைவேற்றப்பட்டாலும் உரிய ஸ்பரிசத் தொடர்பு கிடைக்காத போது அக்குழந்தை பின்னர் ஆளுமைச் சிக்கல்கள் குமுறல்கள் நிறைந்த வாழ்க்கைக் கோலம் போன்றவற்றைச் சந்திக்கின்றது.

ஒரு மனிதனின் வளர்ச்சியில் முக்கிய பங்கு செலுத்தும் காலம் ஆரம்ப பிள்ளைப் பருவம் இக்காலத்திலேயே அவன் தான் பிறந்த கலாசாரத்தின் பெறுமதி, நம்பிக்கைகள், விழுமியங்கள், அவனுடைய நடிபங்கு போன்ற பல விடயங்களை கற்றுக் கொள்கின்றான். எல்லா வகையான தொடர்புகளிலும் இருவகையான தாக்கங்கள் உண்டு. பெரியவர்களின் நடத்தை சிறுவர்களின் பழக்கவழக்கங்களிலும் அதேவேளை சிறுவர்களின் பண்பு, ஆளுமை என்பன பெரியவர்களின் பழக்கவழக்கங்களிலும் தாக்கம் செலுத்தும்.

பொதுவாக இரண்டு வயது வரை நீங்கள் சிரித்தால் சிரித்து உங்களைப் பின்பற்றி செயலாற்றும் உங்கள் குழந்தைகள் பின்னர் வேண்டாம் மாட்டேன் முடியாது இல்லை போன்ற முரண்பாடுகளை காட்டத் தொடங்கிவிடும். இதற்கு அசாதாரண பண்புகள் காரணம் அல்ல. உண்மையில் இங்கு நடந்திருப்ப தெல்லாம் குழந்தையின் தேவைகள் எதிர்பார்ப்புக்கள் விருப்பங்கள் உறுதிப்பாடுகள் முதலானவை இங்கு செயற்படத் துவங்கியுள்ளமையாகும் என்பதனை புரிந்து கொள்ள வேண்டியுள்ளது. இந்த வயதில் சில பொருட்களை பெரும்பாலன நேரங்களில் தங்களுடனேயே வைத்திருப்பார்கள் (such as a blanket, favorite stuffed toy, etc.) குறிப்பிட்ட வயதில் இதனை கைவிட்டுவிடுவார்கள். எனவே பெற்றோர்கள் அதனை ஒரு பெரிய விடயமாகக் கருதி செயற்படுவது சிறந்ததல்ல.

தாய்மார்கள் குழந்தைகளுக்கு உணவூட்ட முயலும்போது அவர்களிடம் இருந்து வேண்டாம். மாட்டேன் என்ற விடைகள் வரும்போது அவர்கள் பொறுமை இழந்து பிள்ளையை கடிந்து கொள்ளல் அல்லது சீண்ட முயல்வா் குழந்தை மீண்டும் அடம்பிடிக்கும் போது தாயின் தண்டனைக்கு ஆளாகும். இது சரியான வழியல்ல. மாறாக கவர்ச்சியான ஓர் இடம், நேர்த்தியான

கவர்ச்சிகரமான பல வர்ணங்கள் உள்ள உணவு வகைகளைத் தயார் செய்யுங்கள் பின்னர் சிறிய அழகிய பாத்திரத்தினுள் உணவு பரிமாறுங்கள் அது அவர்களுக்கு மிகவும் பிடிக்கும். ஏனெனில் தண்டனை வழங்கல் குழந்தைக்கு குற்ற உணர்வைத் தோற்றுவிப்பதுடன் தாழ்வுச் சிக்கல் ஏற்படுவதற்கும் ஒரு காரணமாக அமைந்து விடுகிறது.

குழந்தைகளுடன் நல்லுறவை வளர்க்கும் ஒரு காரணி பாராட்டாகும். கோபமும் அலட்சியமும், கேலியும் எவரிடத்திலும் கசப்புணர்வையே ஏற்படுத் தும். எனவே அவர்களது செயற்பாடுகளை பாராட்டும் புகழும் ஒரு தாயாக நீங்கள் மாறுங்கள். ''நீங்கள் சரியாக செய்தீங்க'', 'இப்பொழுது உங்களால் முடியும்'' போன்ற வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொள்ளுங்கள். அது குழந்தைகளுக்கு உங்கள் மீதும் தனது செயற்பாட்டின் மீதும் ஆர்வத்தை ஏற்படுத்தும். மேலும் அக் குழந்தை எதிர்காலத்தில் இன்னும் ஒரு விடயத்தை தட்டிக்கொடுக்கும் பண்புடையவர்களாக வளர்வார்கள்.

பொதுவாக குழந்தைகளுக்கு எது சரி எது தவறு என்பதில் கவனம் இல்லை. அவர்கள் விரும்பும் போதெல்லாம் சுயாதீனமாக எதையாவது செய்யத்தான் விரும்புவார்கள். அவ்வாறான செய்கைகள் தடைசெய்யப்படும் போதும் முயற்சிகள் மழுங்கடிக்கப்படும் போதும் அது அவர்களை விரக்தி நிலைக்கு உட்படுத்தி குழந்தையின் சுயாதீன செயற்பாட்டு ஆளுமையில் பாதிப்பை ஏற்படுத்தக்கூடும். இதுபோன்றே அவர்களின் கல்விச் செயற்பாட்டை நோக்கினால் கூட சுயமாகப்படிப்பதுதான் அவர்களுக்குச் சிறந்ததாகும். இன்றைய பெரும்பாலான பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் கல்வி விடயத்தில் அவர்கள் மீத்திறன் உள்ளவர்களாக இருக்க வேண்டும் என்பதனையே விரும்புகின்றனர். அதற்காக அவர்கள் முன்பள்ளிக்கல்வி மீது அதீத அக்கறை காட்டுவதுடன் நம் சிறார்கள் மீது அதிக பாரத்தை சுமத்துவதையும் காணமுடிகிறது. இதனால் அவர்களது ஏனைய கண்டறிதல், ஆய்ந்தறிதல் போன்ற திறன்கள் மழுங்கடிக்கப்படுகின்றன.

மேலும் இயற்கையின் வெளிப்பாடுகள் தரும் வர்ணங்கள், எண்ணிக்கைகள், பறவைகள், பூச்சிகள், மிருகங்கள், மணங்கள், தொட்டுணர்வுகள், பூக்கள், இலைகள் போன்ற ஆயிரமாயிரம் தகவல்கள், நுணுக்கங்களில் பலவற்றை குழந்தைகள் தவறவிடுகின்றன என்பது பெற்றோரின் அறியாமையினாலாகும்.

உங்கள் பாராட்டு தட்டிக்கொடுப்பு எல்லாம் உங்கள் குழந்தைக்கு ''தனது முயற்சிக்கு பெற்றோரின் ஒத்துழைப்பு இருக்கிறது என்பதனை உணர்த்தும். அத்துடன் ஊக்கப்படுத்தி வளர்த்தால் அக்குழந்தையானது தன் வாழ்க்கையில் சாதனைகளைப் புரியக்கூடிய குழந்தையாக வளரும். மேலும் நீங்கள் எப்போதும் நியாயம் கூறும் குறைபட்டியல் வாசிக்கும் பெற்றோராக இல்லாதிருப்பதற்கு வழிபாருங்கள். அது உங்கள் குழந்தையின் ஆளுமை மற்றும் ஆரோக்கியமான மன வளர்ச்சிக்கு வழிசமைக்கும். ஏனெனில் எந்நேரமும் விமர்சனத்துக்குள்ளாகும் குழந்தை தாழ்வுச்சிக்கலைச் சந்திக்கும்.

பொதுவாக சமூகத்தில் நிலவும் ஒரு கருத்து அன்னை என்றால் அன்பும் தந்தை என்றால் கண்டிப்பும் என்பதாகும் இது முற்றிலும் உண்மையல்ல குழந்தை வளர்ப்பில் சரிபாதி தந்தையைச் சார்ந்தது என்பது இன்று ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள ஒன்றாகும். தந்தையின் வழிகாட்டலானது ஒரு குழந்தையின் ஆளுமை வளர்ச்சிக்கு இன்றியமையாததாகக் காணப்படுகின்றது என்பதனை தெரிந்து கொள்ளுங்கள். குழந்தைகள் தாயிடம் எதிர்பார்க்கும் பாசம், அணைப்பு, ஸ்பரிசம் என்பவற்றைபோல் தந்தையிடம் எதிர்பார்ப்பது அவரின் நம்பிக்கையைப் பெறுவதாகும்.

ஆரம்பத்தில் விளையாடும் நோக்கில் தந்தையின் உதவியை எதிர்பார்க்கிற குழந்தை காலப்போக்கில் புதியவற்றைத் தெரிந்து கொள்வதற்கு தன் தந்தையை நாடுகிறது. குழந்தைகள் இரண்டு வயது தொடக்கம் தாயிடம் இல்லாத பல திறன்கள், அறிவாற்றல்கள் தந்தையிடம் இருப்பதாக எண்ணத்துவங்குகிறது. குழந்தைகள் தனது தந்தையைப் பார்க்கும்போதும், ஒன்றாக இருக்கும்போதும், வேலை செய்வதைக் கவனிக்கும்போதும் குழந்தை யின் திறன் அதிகரிப்பதுடன் புதிய பெறுபேறுகள் அதனுள் தோன்றுகின்றது. எனவே குழந்தைகளுடன் நீங்கள் இருக்கும்போது உரையாடத் தவறாதீர்கள். அவர்களிடம் நீங்கள் செய்கின்ற வேலையை விளக்குங்கள். குச்சி தடிகள் கொண்டு குச்சி வீடு கட்டிக் காட்டுங்கள் ஒரு பெட்டியில் சில்லுகளைப் பூட்டி இழுத்துக்காட்டுங்கள். உங்கள் குழந்தையின் மகிழ்ச்சியைக் கண்டு கொள்வீர்கள். இது போன்ற உங்கள் சேவைகள் அவர்களுக்கு மிகவும் உயர்ச்சியானவையாகத் தோன்றும். குழந்தைகளுக்கு தன்னம்பிக்கையை வளர்க்கும் பிரதான கருவி தந்தையின் நடவடிக்கையாகும். ஒட்டுதல், வெட்டுதல், பொருத்துதல் போன்ற வேலைகள் மட்டுமல்ல, பணரீதியான நடவடிக்கைகள், கல்வி நடவடிக்கைகள், சமய நம்பிக்கையுடன் தொடர்பான பழக்கவழக்கங்கள் போன்றன தன் தந்தையிடமிருந்து கிடைக்க வேண்டியவையே இவற்றில் கவனம் செலுத்துதல் தந்தையின் பொறுப்பாகும்.

குழந்தைகள் தந்தையின் ஆற்றலையும் திறனையும் மட்டும் பிரதிபண்ணுவதில்லை மாறாக சொல்லாட்சி, பேச்சுவன்மை, நடத்தை, இயல்புகள் போன்ற பல விடயங்களைத் தனதாக்கிக் கொள்கின்றனர். இது போன்றே தந்தையின் கோபப்படும் இயல்பு, பயஉணர்வு, துணிச்சல் முதலான வற்றை இயல்பாகவே குழந்தை பரம்பரைச் சொத்தாக கொள்கின்றது. எனவே இதுபோன்ற விடயங்களை அறிந்து நடந்து கொண்டால் அது உங்களது பிள்ளையின் ஆளுமை விருத்திக்கு உதவியாக அமையும்.

பெற்றோர் தங்கள் குழந்தைகளை நட்பு அற்ற முறையில் வளர்த்தால் அப்பிள்ளை எதிர்காலத்தில் மற்றவர்களுடன் சண்டையிட்டுக் கொண்டிருக்கும் தன்மையினை அவதானிக்க முடியும். எந்தக் குழந்தை வளரும்போது மரியாதைக் குறைவாக வளர்க்கப்படுகின்றதோ பின்னர் அப்பிள்ளை தன்

சூழலிலும் சரி சமூகத்திலும் சரி கூச்ச உணர்வை வெளிக்காட்டும். குழந்தைகள் பாதுகாப்புடன் வளர்க்கப்பட்டால் அவர்கள் பின்னர் தனது எதிர்காலத்தில் நம்பிக்கையோடு வாழப்பழகிக் கொள்ளும். மாறாக பாதுகாப்பு அற்ற சூழலில் வளரும் பிள்ளை நம்பிக்கை அற்ற மனப்பான்மையுடனேயே வாழப்பழகிக் கொள்கிறது.

பிள்ளையானது தனது உடலுறுப்புக்களைப் பற்றி அதிக ஆர்வம் காட்டும் போது பெற்றோர் அதனைப் பற்றிக் கவலைப்படாது அவ்வுறுப்புக்கள் தொடர்பான சரியான சொற்பதங்களை பாவிப்பதோடு இந்த வயதில் இவ்வாறான செயற்பாடுகள் பொதுவானது என்பதனையும் புரிந்து கொள்ள வேண்டும். மாறாகச் செயற்படும் போது அது அவர்களுக்கு குழப்பத்தை ஏற்படுத்தும் அதனால் அவர்கள் பாதிக்கப்படவும் வாய்ப்புண்டு. குழந்தைகளுக்கு விளையாட்டு சமவயதினர் முக்கியமானதாகும். ஆகவே பிள்ளைகளை நண்பர்களுடன் இணைந்து விளையாடி அனுபவத்தினை பெறுவதற்கான அனுமதியினை வழங்குதல் பெற்றோர்களின் கடமையாக வுள்ளது. ஏனெனில் குழந்தைகள் விளையாடும் போது அவர்களின் உடல், உள்ளம் ஆகியன ஆரோக்கியம் அடைவதுடன் அவர்களின் நுண்ணறிவு வளர்ச்சியும் ஏற்படுகின்றது என்பன ஆய்வுகளில் இருந்து தெரியவந்துள்ளது. எனவே குழந்தைகளுக்கு விளையாட்டுக்களைக் கற்றுக் கொடுப்பதற்கு நேரத்தினை ஒதுக்குதல், கற்பனையான விளையாட்டுகள் மற்றும் மற்றவர்களுடன் இணைந்து விளையாடுவதற்கு ஊக்குவித்தல் போன்றவற்றில் பெற்றோர் அக்கறை கொள்ளுதல் நன்று.

குழந்தைகள் தொலைக்காட்சி பார்ப்பதனை குறைத்தல், தொலைக்காட்சி யினை குழந்தைக்கு பொழுதுபோக்கு ஊடகமாகவோ அல்லது கவர்வதற்கான ஊடகமாகவோ பாவிக்கக் கூடாது. உணவு உண்ணும் போது தொலைக்காட்சி யினை நிறுத்தி வைத்தல் வேண்டும். ஏனெனில் தொலைக்காட்சி பார்க்கும் போது குழந்தையினுடைய ஏனைய செயற்பாடுகளில் ஸ்தம்பிதம் ஏற்படுகின்றது. பொதுவாக நோக்குமிடத்து குழந்தை வளர்ச்சியின்போது தாங்கள் நேரான, எதிர்மறையான (positive, negative) ஆகிய இரண்டு விடயங்களைச் சந்திக்கின்றனர். அவற்றினை சரியாக விளங்கும் போது அவர்களால் சிறப்பான வளர்ச்சியினை அடையமுடிகிறது எனலாம் அதாவது குழந்தைகளுக்கு சுதந்திரம் வழங்குவதை positive ஆகவும் கட்டுப்பாடு விதிப்பதை negative கருதும்போது இரண்டினையும் தேவைக்கு ஏற்ப சரியாக வழங்குவதனால் உங்களது குழந்தைகளினால் சிறப்பான வளர்ச்சியினை அடைய முடியும்.

***திருமதி. சுபாநந்தினி உதயகாந்தன்***
*உளவளத்துணை உத்தியோகத்தர்*
*பிரதேசசெயலகம், ஏறாவூர் நகர்*

# நன்றி நவில்கிறோம்

சர்வதேச மகளிர் தின நிகழ்வுகள் வருடா வருடம் நடைபெற்று வருவது யாவரும் அறிந்ததே. அந்த வகையில் எமது பிரதேச செயலகத்தினால் இவ்வருடம் முதன் முறையாக குறுகிய காலத்திற்குள் இம்மலர் வெளியிடுவதற்கு துணை புரிந்த எல்லாம் வல்ல இறையோனுக்கு முதற்கண் நன்றிகள். **"நிஸா"** என்ற நாமம் சூட்டப்பட்ட இம்மலர் சிறப்புற அமைவதற்கு பல்வேறு ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் வழங்கிய எமது மதிப்புக்குரிய பிரதேச செயலாளர் ஜனாபா நிஹாரா மௌஜூத், உதவிப் பிரதேச செயலாளர் AC. அஹமட் அப்fகர், பதவிநிலை உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் உள்ளம் கனிந்த நன்றிகளை தெரிவித்து கொள்கிறோம்.

அத்தோடு இக்கன்னி மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்கிய எமது மதிப்புக்குரிய மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. கலாமதி பத்மராஜா அவர்களுக்கும் ஆக்கங்களை வழங்கிய படைப்பாளிகள், சமூக சிந்தனையாளர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் இச்சிறப்பு மலருக்கு பெயர் சூட்டுவதில் ஆர்வம் காட்டி ஒத்துழைப்பு வழங்கிய அத்தனை உள்ளங்களுக்கும் நன்றிகள் உரித்தாகட்டும்.

மேலும் இம்மலருக்கான முன் அட்டையை வடிவமைத்த ஜனாப். MIM.முனீர் (அபிவிருத்தி உத்தியோகத்தர்) அவர்களுக்கும் மனப்பூர்வமான நன்றிகள். அத்தோடு இம்மலர் சிறப்புற அமைவதற்கு பக்க வடிவமைப்பு செய்து வழங்கிய ஜனாப் MHM. நியாஸ் (கலாசார உத்தியோகத்தர்), மற்றும் பல வழிகளிலும் ஒத்துழைப்பு நல்கிய MCM. றிஸ்வான் (கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்), MIMM. மஹ்பூல் (கலாசார மேம்பாட்டு உத்தியோகத்தர்) ஆகியோருக்கும் மனம் நிறைந்த நன்றிகள். அத்துடன் மலர்குழு, விழாக்குழு அங்கத்தவர்களின் படப்பிடிப்புக்கு உதவிய ஜனாப். SL. அப்துல் அஸீஸ், இந்நூலினை சரிபார்த்து தந்த கலாபூசணம். SH. அஹமட் லெப்பை (ஏறாவூர் தாஹிர் சேர்) ஆகியோருக்கும் மனப்பூர்வமான நன்றிகள்.

இம் மலர் தங்கள் கரங்களில் வந்தடைய நிதியுதவி வழங்கிய Islamic Relief, Kaviya, Sabeer Mall, M.H.M. Stores ஆகியோருக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகள். அத்தோடு கணினி உதவி செய்த MMM. பஸாஹிர் (அபிவிருத்தி உத்தியோகத்தர்) அவர்களுக்கும் இம்மலர் சிறப்புற வெளியிடுவதற்கு உதவி புரிந்த அனைத்து நல்லுள்ளங்களுக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகள்.

**மலர்க்குழு**

දැයේ අභිමානයයි

அவள்; தேசத்தின் பெருமைக்குரியவள்

She; pride of the nation

2023

# 2023 சர்வதேச மகளிர் தின மகுடவாசகம்

# 2022 இல் மகளிர் பிரிவினால்
# மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்களில் சில...

